# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி**
**வணக்கத்திற்குரிய மேயர்,**
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 190 / 2013 / எம்சி. 8 நாள் : 24 .1.2013**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்ற சாதாரணக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற **31.1.2013 வியாழக்கிழமை பிற்பகல் 3.00** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

**/உண்மை நகல்/**

**மாமன்ற செயலாளர்**

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

# மாமன்ற சாதாரணக் கூட்டம் - ஜனவரி 2013

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| | **பொருளடக்கம்** |
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| 1 | பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி - இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் இம்மாநகராட்சிக்கு வர விருப்பம் தெரிவித்த நிரந்தர பணியாளர்கள் தொகுப்பூதிய பணியாளர்கள் மற்றும் தினக்கூலிப் பணியாளர்களை மாநகராட்சியில் ஈர்த்துக்கொள்ள அனுமதிக்கும் அரசாணையினை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பித்தல் - தொடர்பாக |
| 2 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.50 அழகப்பா ரோடு மாநகராட்சி வணிக வளாக கடைகள் - ஒதுக்கீடு செய்யப்பட்டு - ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 3 | பொறியியல் பிரிவு - தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்வது – மதிப்பீட்டுத் தொகையான ரூ.75,00,000/- க்கு மாமன்ற நிர்வாக அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| 4 | பொறியியல் பிரிவு - 5 அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 5 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண்.22– காமராஜபுரத்தில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாயக்கூட கட்டிடம் வாடகை நிர்ணயம் செய்வது– மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக. |
| 6 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 61 – குப்பை மாற்று நிலையத்தில் சுற்றுச்சுவர் கட்டுதல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 7 | Jnnurm – பில்லூர் 2ம் குடிநீர் திட்டம் - பில்லூர் அணைப் பகுதியில் நீரேற்று கிணறு அமைந்துள்ள இடத்தில் சுற்றுச்சுவர் கட்டுதல் பணி - செலவினங்களை குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | Jnnurm – 24x7 குடிநீர் திட்டம் - விரிவான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் பெற ஆலோசனை நிறுவனம் நியமித்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - செலவினங்களை குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 9 | Jnnurm – ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம் - 3ம் சிப்பப் பணி – கழிவுநீர் குழாய் அமைக்கும் பணி – ஒப்பந்தப்புள்ளி கோரியது – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 10 | வடக்கு மண்டலம்- வார்டு எண்.26 மற்றும் 43வது வார்டுகளிலுள்ள கீழ்கண்ட பணிகளை தி/ள்.அய்யப்பா அசோசியேட்ஸ் ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பணி ஒப்படைப்பு செய்ததில் பணியினை துவங்காததால் ஒப்பந்ததாரர் பதிவை ரத்து செய்தல் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 11 | நகரமைப்பு பிரிவு – சிறைத்துறைக்கு சொந்தமான இடத்தில் செம்மொழி பூங்கா அமைக்க பெறப்பட்ட அரசாணையில் மாற்று உபயோகம் கோரியது – **5.63** ஏக்கர் இடத்தில் உள்விளையாட்டு அரங்கம் மற்றும் நீச்சல் குளம் அமைத்து பராமரித்தல் மற்றும் வருவாயினை மாநகராட்சியும் விளையாட்டு துறையும் பங்கீடு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக. |
| 12 | கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட மற்றும் வடவள்ளி பகுதிகளுக்குட்பட்ட வார்டு எண் 5,6,7,8,9,16 மற்றும் 17 க்குட்பட்ட பகுதிகளில் - குடிநீர் விநியோக பகிர்மான குழாய்கள் வடிவமைத்து – விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய விருப்பு கேட்பு அறிக்கை (EOI) வரவேற்கப்பட்டு ஆலோசகர்கள் நியமனம் செய்யவும் - தொகை வழங்கவும் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| 13 | Jnnurm – ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம் - 6ம் சிப்பப் பணி – ஒண்டிப்புதூரில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் - ஒப்பந்தப்புள்ளி கோரியது – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **14** | Jnnurm – பில்லூர் II ம் குடிநீர் திட்டம் - பில்லூர் அணைப் பகுதியில் பணியாளர்களின் குடியிருப்பு A பிளாக் கட்டுதல் பணி – மதிப்பீடு ரூ. 75 இலட்சம் - மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **15** | Jnnurm – பில்லூர் II ம் குடிநீர் திட்டம் - பில்லூர் அணைப் பகுதியில் பொறியாளர்களின் குடியிருப்பு கட்டுதல் பணி – மதிப்பீடு ரூ. 75 இலட்சம் - மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **16** | Jnnurm – பில்லூர் II ம் குடிநீர் திட்டம் - பில்லூர் அணைப் பகுதியில் கட்டப்படவுள்ள பணியாளர்களின் குடியிருப்பு பகுதியில் கான்கீரிட் சாலை, தெருவிளக்கு, சாலை தடுப்புச்சுவர் கட்டுதல் பணி - மதிப்பீடு ரூ. 75 இலட்சம் - மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **17** | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 59 – மகாத்மா காந்தி ரோட்டில் தார் சாலை அமைத்தல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **18** | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 22 – வடகோவை மேம்பாலம் மற்றும் சாலையோர பூங்கா பராமரிப்பு பணியினை நெடுஞ்சாலைத்துறையின் அனுமதியுடன் மாநகராட்சி மேற்கொள்ளுதல் மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **19** | பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண் 52 – ஆவராம்பாளையம் சாலையில் சின்னசாமி சாலை முதல் சங்கனூர் பள்ளம் வரை மற்றும் பாலாஜி நகர் பிரதான சாலையில் தார் தளம் புதுப்பித்தல் பணி – மதிப்பீடு ரூ. 64 இலட்சம் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **20** | நகரமைப்புப் பிரிவு - இரயில்வே திட்டப்பணிகள் - இரயில்வே கடவுகள் உள்ள மாநகராட்சி சாலைகளில் மேம்பாலம் கட்டும் பணி மேற்கொள்ள நெடுஞ்சாலைத்துறைக்கு மாநகராட்சி சாலைகளை தற்காலிகமாக ஒப்படைப்பு செய்வது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **21** | நகரமைப்புப் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண்.57 - காமராஜர் சாலை, மசக்காளிபாளையம் சாலை இணைப்பு திட்டச்சாலை 40 அடி அகலமுள்ள சாலை - நில ஆர்ஜிதம் செய்து உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு அனுப்பி வைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக தொடர்பாக. |
| **22** | வடக்கு மண்டலம் - வார்டு எண் 1 - துடியலூர் பகுதியில் உள்ள இரயில் நிலையத்தில் இரயிலை நிறுத்தி எடுத்துச் செல்ல தேவையான அடிப்படை வசதிகளை செய்தல் - தென்னக இரயில்வே அலுவலகத்தில் இருந்து வந்த கடிதத்தின் மீது மேல் நடவடிக்கை எடுத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **23** | நகரமைப்புப் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண்.57 - நிலையில் உள்ள மசக்காளிபாளையம் சாலை விஸ்தரிப்பு - விரிவு அபிவிருத்தி திட்டத்தில் மறுவரையறை செய்தல் - உத்தேசம் உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு அனுப்பி வைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **24** | நகரமைப்புப் பிரிவு - வடக்கு மண்டலம் - மேட்டுப்பாளையம் சாலை - சத்தியமங்கலம் சாலை இணைப்பு திட்ட சாலை பிரேரணை சமர்ப்பித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **25** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி வணிக வளாக கடைகள் -ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யவும் மற்றும் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டுதல் – தொடர்பாக |
| **26** | பொது சுகாதாரம் - மாநகராட்சிப் பகுதிகளில் அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில்கள் மற்றும் வியாபாரங்கள் போன்ற 58 இனங்கள் உரிமையாணைக் கட்டணங்கள் நிர்ணயம் செய்து பட்டியலில் புதிதாக சேர்ப்பது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **27** | பணியமைப்பு – திரு. எம். தனபாலன், துப்புரவு ஆய்வாளர், பொள்ளாச்சி நகராட்சி – கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒரு வழி பணி மாறுதல் கோருவது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **28** | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 47 - இராயப்பா நகர் மாநகராட்சி கட்டிடத்தில் இயங்கி வரும் நூலகத்திற்கு வெளிச்சந்தை மதிப்பில் வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **29** | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 47 - இராயப்பா நகர் மாநகராட்சி கட்டிடத்தில் இயங்கி வரும் காவல் துறை அலுவலகத்திற்கு வாடகை உயர்வு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **30** | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 26 மற்றும் 43ல் இயங்கி வரும் நியாய விலை கடைகளுக்கு வெளிச்சந்தை மதிப்பில் வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **31** | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வரவினங்களில் வசூலிக்கப்பட்டுள்ள தொகைகளுக்கு மத்திய கலால் துறைக்கு செலுத்தப்பட வேண்டிய சேவை வரியினை செலுத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் தொடர்பாக |
| **32** | வருவாய் பிரிவு - JnNURM - BSUP திட்டத்தின் கீழ் கட்டப்படும் குடியிருப்புகள் - சொத்துவரி - கட்டிட உரிமம் தொகை, இடிபாடு அகற்றுதல் கட்டணம், தொழிலாளர் நல நிதி தொகை - அனுமதிக்கும் கூடுதலான கட்டிடத்திற்கு அபராதம் விதித்தல் -விலக்கு கோருதல்- மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **33** | வருவாய் பிரிவு - வணிகவளாக கடைகள் - 6 மாதத்திற்கு மேல் மாதாந்திர வாடகைத்தொகை செலுத்தாத கடைகளின் உரிமத்தை ரத்துசெய்து பொது மின் ஏலத்தில் வைப்பது – சிறப்பு நிபந்தனை இனத்தில் சேர்த்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **34** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் வார்டு எண்.80, காம்போதி சந்து – மாநகராட்சிக்கு சொந்தமான சலவைத்துறை – வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **35** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண், 73-ல் புலியகுளம் சாலையில் உள்ள தமிழ் நாடு மின்சார வாரிய உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு 01.01.2013-ல் பொது பணித்துறை வாடகை மதிப்பீட்டின்படி மாதாந்திர வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **36** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.82 - ஈஸ்வரன் கோவில் வீதியிலுள்ள நடைபாதை கடைகள் - ஒதுக்கீடு செய்யப்பட்டு வாடகையை உயர்வு செய்து – உரிமம் புதுப்பித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **37** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் குத்தகை இனங்கள் - 01.04.2013 முதல் 31.03.2016-ம் ஆண்டு வரை ஒப்படைத்தல் – பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த பட்ச ஏலக் கோரிக்கையை ஏற்று ஒப்படை செய்வது - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **38** | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு 97 சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் வணிகவளாக கடைகள் (14 கடைகள்) அரசாணையின்படி வாடகை உயர்வு செய்வது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **39** | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் – வருடாந்திர குத்தகை இனங்கள் **2013–2014**ம் ஆண்டிற்கு உரிமம் புதுப்பிக்கப்பட வேண்டியது– மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **40** | வருவாய் பிரிவு – தெற்கு மண்டலத்திற்குட்பட்ட – வார்டு எண்.**97** சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் – ஏல மேடையில் வசூலிக்க வேண்டிய கட்டணங்களில் திருத்தம் செய்வது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **41** | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் – வார்டு எண் **97** சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் வணிக வளாக கடைகள் **30, 33, 34** ஏலம் விடுவது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **42** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண்.17- மருதமலை அடிவாரம் பகுதியில் மாநகராட்சி சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ள கழிப்பறையின் சுற்றுப்புற பகுதியில் உள்ள காலியிடத்தினை வாகனநிறுத்துமிடமாக கருதியும் -கழிப்பறைகளுடன் சேர்த்து ஆண்டுமதிப்பு நிர்ணயம் செய்து - பொது ஏலம் விடுவது - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **43** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் 2013-15-க்கான குத்தகை உரிம இனங்கள் - பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 26.12.2012 மற்றும் 10.5.2012-ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **44** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் – வார்டு எண்.**21**க்குட்பட்ட பூசாரிபாளையத்தில் வாடகை கட்டிடத்தில் செயல்படும் அங்கன்வாடி மையம் பழுதடைந்த நிலையில் உள்ளதால் செயல்படாத நிலையில் உள்ள மாநகராட்சி நூலக கட்டிடத்திற்கு மாற்றித் தரக் கோருவது - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **45** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண்கள்.6,7,8,9-ல் முந்தைய கவுண்டம் பாளையம் நகராட்சியால் கூட்டுறவு பண்டக பொது விநியோகத்திட்ட நியாய விலை கடைகளுக்கு கட்டிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட கடைகளுக்கு மாதாந்திர வாடகைத்தொகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **46** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வணிக வளாக கடைகள் - -பன்னீர் செல்வம் பூமார்க்கெட் மேடை கடைகளுக்கு தினசரி வாடகையிலிருந்து மாதவாடகையாக கணக்கீடு செய்வது - உரிம காலம் முடிவுற்ற கடைகளுக்கு 1.4.2013 முதல் 15% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **47** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் -வணிக வளாக கடைகள் - உரிம காலம் முடிவுற்ற கடைகளுக்கு 1.4.2013 முதல் 15% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **48** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வணிக வளாக கடைகள் - உரிம காலம் முடிவுற்ற கடைகளுக்கு 1.4.2013 முதல் 9 வருடம் முடிவடைந்த கடைகளுக்கு பொதுபணித்துறை மதிப்பீட்டின்படி வாடகை உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் – மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக |
| **49** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம்- வருடாந்திர குத்தகை இனங்கள் 2013-14-ம் ஆண்டிற்கு சம்மதக் கடிதம் வழங்கிய குத்தகைதாரர்களுக்கு 5% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல், மற்றும் சம்மத கடிதம் வழங்கப்படாத இனங்களுக்கும், மூன்றாண்டு முடிவுற்ற இனங்களுக்கு பொது ஏலம் கோருதல் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |
| **50** | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - வணிகவளாகக் கடைகள்- சிங்காநல்லூர் பேருந்து நிலையம்- உரிமம் காலம் மூன்று ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசு வழிகாட்டுதலின் படி 15% உயர்வு செய்து வாடகை நிர்ணயம் செய்தல்—மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |
| **51** | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - குத்தகை இனங்கள் - 2013-16 ம் ஆண்டு உரிமம் ஒப்படைத்தல் - ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |
| **52** | பொறியியல் பிரிவு - சிறுவாணி அணையில் பருவமழை பொய்த்ததால் நீர் பிடிப்புப்பகுதியில் சேகரிப்பு நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது - பில்லூர் II இராமகிருஷ்ணாபுரம் மேல்நிலை நீர் தேக்கத்தொட்டியிலிருந்து சிறுவாணி திட்டம் பாரதி பூங்காவில் ஏற்கனவே உள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி வரை குடிநீர் பிரதான குழாய் இணைத்து சிறுவாணி நீர் பற்றாக்குறை ஏற்படும் பகுதிகளுக்கு பில்லூர் குடிநீர் விநியோகம் செய்யும் திட்டத்திற்கு, மதிப்பீட்டு தொகை ரூ.17.16 கோடியில் ரூ.10.00 கோடி கடன் உதவி பெறவும் மற்றும் ரூ.7.16 கோடி மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் அதற்கான நிதி ஒதுக்கீடு அனுமதியும் மற்றும் நிர்வாக அனுமதி வேண்டி, கூடுதல் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது – மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பு. |
| **53** | பொது சுகாதாரப் பிரிவு - உதவித் தொகை – கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தில் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் – வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குவது – மாமன்றத்தின் பின்னேற்பு கோருதல் - தொடர்பாக. |
| **54** | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 95 – திருமறை நகர் பகுதியில் தார் சாலை அமைத்தல் - மதிப்பீடு 75இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **55** | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதிகளில் கூடுதல் குடிநீர் வழங்குதல் - உக்கடம் புறவழிச்சாலையிலிருந்து சாரதா மில் மேல்நிலை நீர் தேக்க தொட்டி வரை பிரதான குடிநீர் குழாய் அமைக்க ரூ.380 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு பிரேரனை அனுப்புதல் - மாமன்ற அனுமதி வேண்டுதல்- தொடர்பாக. |
| **56** | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி கட்டிடங்களின் மேற்கூரைகளில் சூரிய ஒளி மின் தகடுகள் மூலம் மின்சாரம் தயாரித்து பயன்படுத்துவதற்கும் அதற்கான செலவினத்தை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து பெறுவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டுதல் – தொடர்பாக |
| **57** | பொறியியல் பிரிவு - ஐந்து அபிவிருத்திப் பணிகள் செய்தல் - ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **58** | பொறியியல் பிரிவு - இரண்டு அபிவிருத்திப் பணிகள் செய்தல் - ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **59** | பொறியியல் பிரிவு - வார்டு எண்.80ல் உள்ள ராஜ வீதியில் மகப்பேறு மருத்துவமனை எதிரில் வணிக வளாகம் கட்டுதல் பணி– ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

**நன்றியுரை**

அ) **திருக்குறள்**

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அ∴தொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

**(குறள் - 38)**

**விளக்கம்**

வாழ்வில் கழிக்கும் ஒவ்வொரு நாளையும் வீணாக்காது அறவழியில் நாம் செயல்களை ஆற்றினால், அவை ஒருவருடைய வாழ்க்கைப் பாதையைச் செப்பனிடும் கற்களாக அமையும்.

**திருவள்ளுவர்.**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## சிறப்புத் தீர்மானம்

10 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட கோவை வடக்கு தாலுக்காவை இரண்டாகப் பிரித்து கவுண்டம்பாளையம் அல்லது துடியலூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுக்காவை உருவாக்கவேண்டும். அதேபோல் கோவை தெற்கு தாலுக்காவை இரண்டாகப் பிரித்து குனியமுத்தூர் அல்லது மதுக்கரையை தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுக்காவை உருவாக்க வேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் நியமனக்குழு உறுப்பினர் திரு ம. ராஜேந்திரன் அவர்களால் முன்மொழியப்பட்டு 44 வது மாமன்ற உறுப்பினர் திரு. ரா. வெண்தாமரை பாலு அவர்களால் வழிமொழியப்பட்டது .

## சிறப்புத் தீர்மானம் எண் 1 நாள் 31.01.2013

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## சிறப்புத் தீர்மானம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் சிறந்த மாநகராட்சி என கோயம்புத்தூர் மாநகராட்சி தேர்வு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டதின் நினைவாக, அவ்விருதிற்கு வழங்கப்பட்ட தொகையினைப் பயன்படுத்தி, கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைகளில் திருச்சி சாலை, அவிநாசி சாலை, மேட்டுப்பாளையம் சாலை, பாலக்காடு சாலை மற்றும் பொள்ளாச்சி சாலை ஆகிய இடங்களில் வளைவு நுழைவாயில் அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் 44 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு ரா. வெண்தாமரை பாலு அவர்களால் முன்மொழியப்பட்டு நியமனக்குழு உறுப்பினர் திரு ம. ராஜேந்திரன் அவர்களால் வழிமொழியப்பட்டது.

## சிறப்புத் தீர்மானம் எண் 2 நாள் 31.01.2013

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## சிறப்புத் தீர்மானம்

கோயம்புத்தூர் மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் எவ்வித பிரதி உபகாரமும் எதிர்பார்க்காமல் தங்களது முழு நேரத்தையும் செலவிட்டு மக்கள் பணியாற்றி வருகின்றனர். அவர்களது நடவடிக்கைகளை விமர்சித்தும், மாநகராட்சி நிர்வாகத்தை விமர்சித்தும் உண்மைக்குப் புறம்பாக சில பத்திரிக்கைகள் செய்திகள் வெளியிடுகின்றன. இதனை இம்மாமன்றம் வன்மையாக கண்டிப்பதுடன் அவ்வாறு உண்மைக்குப் புறம்பாகவும், அவதூறாகவும் செய்தி வெளியிடும் பத்திரிக்கைகளுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டு வரப்பட்டது.

## சிறப்புத் தீர்மானம் எண் 3 நாள் 31.01.2013

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## சிறப்புத் தீர்மானம்

கோயம்புத்தூர் மாநகராட்சியின் பழைய 72 வார்டுகளில் உள்ள பழுதடைந்த தெருவிளக்குளை பராமரிக்கவும், சரிசெய்யவும் மாலை நேரங்களில் பணிபுரிய பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதேபோல் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளிலும் தெருவிளக்குளை பராமரிக்க தற்காலிகமாக பணியாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் கிழக்கு மண்டல தலைவர் திரு கே.ஆர்.ஜெயராம் அவர்களால் முன்மொழியப்பட்டு தெற்கு மண்டல தலைவர் திரு எம். பெருமாள்சாமி அவர்களால் வழிமொழியப்பட்டது.

## சிறப்புத் தீர்மானம் எண் 4 நாள் 31.01.2013

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## சிறப்புத் தீர்மானம்

கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அலைபேசிக்கான (Cell phone) அழைப்புக் கட்டணம் தற்போது இருக்கும் ரூ. 250.00 யிலிருந்து ரூ. 500.00- (ரூபாய் ஐநூறு மட்டும்) ஆக உயர்த்த வேண்டும் என்ற சிறப்பு தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவர் திரு ஆர். பிரபாகரன் அவர்களால் முன்மொழியப்பட்டு 23-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ். மணிமேகலை அவர்களால் வழிமொழியப்பட்டது.

## சிறப்புத் தீர்மானம் எண் 5 நாள் 31.01.2013

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## சிறப்புத் தீர்மானம்

கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், பொதுநலப் பணிகளுக்காக வார்டுகளுக்கு செல்லும் போது வாகன உபயோகம் மற்றும் பிற வகைகளில் தங்களது சொந்த பணத்தை அதிகளவில் செலவிட வேண்டியுள்ளதால், அண்டை மாநிலத்தில் உள்ளதுபோல் மாமன்ற உறுப்பினர்களுக்கு மாத சம்பளம் மற்றும் பயணப்படி வழங்கவும், வார்டு குழு கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு வழங்கப்படும் அமர்வுக் கட்டணம் ரூ. 50.00 யிலிருந்து ரூ. 500.00 (ரூபாய் ஐநூறு மட்டும்) ஆக உயர்த்தி வழங்கவும், மாமன்ற கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான அமர்வுப்படியை ரூ. 800.00 லிருந்து ரூ.4000.00 (ரூபாய் நான்காயிரம் மட்டும்) ஆகவும் உயர்த்தி வழங்கவும் உரிய ஆணைகள் பிறப்பிக்க தமிழக அரசுக்கு கோரிக்கை அனுப்பவேண்டும் என்ற சிறப்பு தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவர் திரு ஆர். பிரபாகரன் அவர்களால் முன்மொழியப்பட்டு 44-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு ரா. வெண்தாமரை பாலு அவர்களால் வழிமொழியப்பட்டது.

## சிறப்புத் தீர்மானம் எண் 6 நாள் 31.01.2013

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

### பொருள் எண் 1

| | |
|---|---|
| பொருள் | பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி - இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் இம்மாநகராட்சிக்கு வர விருப்பம் தெரிவித்த நிரந்தர பணியாளர்கள் தொகுப்பூதிய பணியாளர்கள் மற்றும் தினக்கூலிப் பணியாளர்களை மாநகராட்சியில் ஈர்த்துக்கொள்ள அனுமதிக்கும் அரசாணையினை மாமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. |
| பார்வை | 1. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள் 06.07.2012<br>2. அரசாணை எம்.எஸ். எண் 117, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந4) துறை நாள் 19.12.2012. |

-----------------

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள 3 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள் மற்றும் 1 கிராம ஊராட்சியில் பணிபுரிந்து வரும் பணியாளர்களில் இம்மாநகராட்சிக்கு பணிக்கு வர விருப்பம் தெரிவித்த 7 இளநிலை உதவியாளர்கள், 6 வரிவசூலர்கள், 2 கணினி விபர பதிவாளர்கள், 3 பதிவுரு எழுத்தர்கள், 4 ஓட்டுநர்கள், 1 பணி ஆய்வாளர், 3 துப்புரவு ஆய்வாளர்கள், 3 பணி மேற்பார்வையாளர்கள், 8 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், 1 மின்கம்பி உதவியாளர், 15 குடிநீர் விநியோக பணியாளர்கள், 2 தெருவிளக்கு உதவியாளர்கள், 2 சமுதாய அமைப்பாளர்கள், 1 அலுவலக உதவியாளர் மற்றும் 310 துப்புரவு பணியாளர்களுடன் சேர்த்து மொத்தம் 368 நிரந்தர பணியாளர்கள் மற்றும் தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்துவரும் 59 பணியாளர்களை இம்மாநகராட்சி பணியமைப்பு விதிகளின்படி ஈர்த்துக்கொள்ள அரசின் அனுமதி வேண்டி பார்வை 1-ல் காணும் செயற் குறிப்பில் அனுப்பி வைக்கப்பட்டது.

இம்மாநகராட்சியின் பரிந்துரையினை ஏற்று பார்வை 2-ல் கண்டுள்ள அரசாணை எண். 117, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந4) துறை நாள் 19.12.2012-ன்படி இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள 3 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள் மற்றும் 1 கிராம ஊராட்சியில் பணிபுரிந்து வரும் பணியாளர்களில் இம்மாநகராட்சி பணிக்கு வர விருப்பம் தெரிவித்த நிரந்தர பணியாளர்கள் 368 பணியாளர்களை இம்மாநகராட்சியுடன் இணைத்து ஆணையிடப்பட்டுள்ளது. தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் 59 பணியாளர்களை தற்போது பெற்று வரும் ஊதியத்திலிலேயே தொடரவும் ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட அரசாணையில் இடம் பெறாத 29 பணியாளர்கள் கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டபோதே உள்ளாட்சி நிர்வாக பணிகளுக்கு செல்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். எனவே மேற்படி 29 பணியாளாள்களை 31.01.2013 பிற்பகல் முதல் விடுவித்து தாய்துறைக்கு திருப்பி அனுப்பலாம். எனவே அரசாணை எண் 117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந4) துறை நாள் 19.12.2012 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் 5734/2011/எம்.சி. 2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 319 நாள் 31.01.2013</u>**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 2

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.50 அழகப்பா ரோடு மாநகராட்சி வணிக வளாக கடைகள் - ஒதுக்கீடு செய்யப்பட்டு - ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்து – உரிமம் புதுப்பித்தல் - தொடர்பாக

பார்வை :

1) அரசாணை எண். 147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.
2) அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.
3) வ.வி.ம.நி.குழு தீர்மான எண்.129நாள்.22.10.2012.

*********

பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீட்டித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92–நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07–ன் படி புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணையின் படி பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் வரி வதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.129 நாள்.22.10.12-ன் படி

1. அரசாணை எண்.92 ந.நி.ம.கு.வ துறை நாள்.03.7.2007-ல் தெரிவித்து உள்ளவாறு ஒதுக்கீடு பெற்று 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு வெளிசந்தை மதிப்பில் வாடகை உயர்வு செய்யவும், 9 ஆண்டுகள் முடிவடையாத கடைகளுக்கு 15% வாடகை உயர்வு செய்யவும் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

2. கடைகள் பற்றிய முழு விவரங்களுடன் மாமன்றத்திற்கு பொருள் வைத்து ஒப்புதல் பெற தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 50 அழகப்பா ரோட்டில் உள்ள 3 மாநகராட்சி வணிக வளாக கடைகள் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்ததால் அக்கடைகளுக்கு அரசின் ஆணைப்படி தற்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் பொதுப்பணித்துறையின் வாடகை மதிப்பீட்டு கணக்கீட்டின்படி 01.01.2013 முதல் வாடகையினை உயர்வு செய்யலாம். (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) உயர்வு செய்யப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்யவும் மற்றும் வித்தியாச வாடகையினை வசூல் செய்யவும், இத்துடன் சேவை வரி 12.36% யினை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் உரிமம் புதுப்பித்து ஒப்படைக்கவும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்துசெய்து மறுஏலத்திற்கு கொண்டுவரவும், மான்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.10119 /2012 / அ1 (ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 320 நாள் 31.01.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 129 நாள் 22.10.2012 –ன் தீர்மானத்திற்கு அனுமதி அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 3

பொருள் - கோவை மாநகராட்சி - தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்வது – மதிப்பீட்டுத் தொகையான ரூ.75,00,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டுவது தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட 5 மண்டலங்களுக்குட்பட்ட 100 வார்டுகளில் அழுத்தம் குறைவுள்ள பகுதி, குடிசை பகுதி, மேடான பகுதி தவிர பராமரிப்பு பணிகளான குடிநீர் கசிவு சரிசெய்தல், நெடுஞ்சாலைத் துறை சாலைகள் அகலப்படுத்துதல் பணிகளின் போது சேதமடையும் பிரதான குடிநீர் குழாய்களை மாற்றியமைத்தல், கோடை காலத்தில் மின்தடை நேரங்களில் ஏற்படும் குடிநீர் விநியோக தடை காலங்களில் மற்றும் குடிநீர் சம்பந்தமான அன்றாடம் பெறப்படும் புகார்களுக்கு ஏற்றவாறு டேங்கர் லாரிகள் மூலம் 1)பாரதி பூங்கா 2) புலியகுளம் 3) வரதராஜபுரம் 4) கணபதி MSR மற்றும் 5) சாரதாமில் (சுந்தராபுரம்) மேல்நிலைத் தொட்டிகளிலிருந்து, மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கும் சேர்த்து மாநகராட்சி டேங்கர் லாரிகள் 7 எண்ணிக்கை தவிர தேவைக்கேற்ப தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

தற்சமயம் தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு மதிப்பீட்டு ஒப்பந்த தொகை முடிவடையவுள்ளதால் மதிப்பீடு ரூ.75,00,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 14291/2012/MD2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 321 நாள் 31.01.2013**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 4

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 04.12.2012 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 11935/12/ எம்.டி.1 | வார்டு எண்.24ல் உள்ள ஆரோக்கியசாமி ரோடு மேற்கு, தென்புறத்தில் வணிக பயன்பாட்டுக் கடைகள் கட்டுதல் | 37.00 | 22-11-2012 இரண்டாம் அழைப்பு | 1.திரு என். குருவாயூரப்பன் கோயம்புத்தூர் 4.07% அதிகம் 2. தி/ள் என்.பி. கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் 4.39% அதிகம் | .திரு என். குருவாயூரப்பன் கோயம்புத்தூர் 4.07% அதிகம் |
| 2 | 8889/12 எம்.டி.1 | வார்டு எண்.8ல் உள்ள கவுண்டம்பாளையம் வார்டு அலுவலகம் டி.வி.எஸ் நகர் மெயின் ரோட்டில் வணிக பயன்பாட்டுக் கடைகள் கட்டுதல் | 19.50 | 22-11-2012 இரண்டாம் அழைப்பு | திரு. பி. இளங்கோ, கோயம்புத்தூர் 4.77% அதிகம் | திரு. பி. இளங்கோ, கோயம்புத்தூர் 4.77% அதிகம் |
| 3 | 11936/12/ எம்.டி.1 | வார்டு எண்.24ல் உள்ள மேற்கு மண்டல அலுவலகம் கிழுபுறம் வணிக பயன்பாட்டுக் கடைகள் கட்டுதல் | 44.00 | 22-11-2012 இரண்டாம் அழைப்பு | திரு.என். குருவாயூரப்பன் கோயம்புத்தூர் 3.93% அதிகம் | திரு.என். குருவாயூரப்பன் கோயம்புத்தூர் 3.93% அதிகம் |
| 4 | 11617/12/ எம்.டி.1 | வார்டு எண்.1ல் உள்ள துடியலூர் தினசரி சந்தை அருகில் வணிக பயன்பாட்டுக் கடைகள் கட்டுதல் | 49.80 | 22-11-2012 இரண்டாம் அழைப்பு | தி/ள் ஆனந்தா எலெக்ட்ரிக்கல்ஸ் அன்ட் ஒயரிங் கான்ட்ராக்டர்ஸ் கோயம்புத்தூர் 4.96% அதிகம் | தி/ள் ஆனந்தா எலெக்ட்ரிக்கல் ஸ் அன்ட் ஒயரிங் கான்ட்ராக்டர்ஸ் கோயம்புத்தூர் 4.96% அதிகம் |
| 5 | 8888/12/ எம்.டி.1 | வார்டு எண்.5ல் உள்ள ஒணாப்பாளையம் மெயின் ரோடு அசோக் நகர் கிழக்கில் வணிக பயன்பாட்டுக் கடைகள் கட்டுதல் | 20.00 | 22-11-2012 இரண்டாம் அழைப்பு | .திரு.கே, ரவிக்குமார், கோயம்புத்தூர் 4.98 % அதிகம் | திரு.கே, ரவிக்குமார், கோயம்புத்தூர் 4.98 % அதிகம் |

அலுவலகக்குறிப்பு :- வரிசை எண். 1 முதல் 5 வரை உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் : 11935/12/ எம்.டி.1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 322 நாள் 31.01.2013**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 5

பொருள் : கோயம்புத்தூர் மாநராட்சி – மேற்கு மண்டலம் - வார்டு எண்.22– காமராஜபுரத்தில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாயக்கூட கட்டிடம் வாடகை நிர்ணயம் செய்வது– தொடர்பாக.

பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 134. நாள். 22.10.2012.

---

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண். 22 க்கு உட்பட்ட காமராஜபுரத்தில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாயக்கூட கட்டிடம் பொது மக்கள் பயன்பாட்டிக்கு தயார் நிலையில் உள்ளதாகவும், மேற்படி இடத்திற்கு பொதுப்பணித்துறையின் மதிப்பின்படி நாள் ஒன்றுக்கு வாடகை ரூ. 1,905/- நிர்ணயம் செய்யலாம் என இளம் பொறியாளர் குறிப்பு வழங்கி உள்ளார்.

எனவே மேற்கண்ட சமுதாயக் கூடத்தை மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கவும், வைப்புத்தொகை ரூ. 2500/- ஆகவும் நாள் ஒன்றுக்கு வாடகை ரூ. 2000/- ஆக நிர்ணயம் செய்யவும், சேவை வரி வசூல் செய்யவும், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் தனது தீர்மான எண். 134 நாள். 22.10.2012-ல் வைப்புத்தொகை ரூ. 2,500/- நிர்ணயம் செய்யவும் சேவை வரி வசூலிக்கவும் மற்றும் ஒரு நாள் வாடகை ரூ. 2000/- நிர்ணயம் செய்யலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 9753 / 2012 /A1 (W)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 323 நாள் 31.01.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 134 நாள் 22.10.2012ன் தீர்மானத்திற்கு அனுமதி அளித்தும் நாள் வாடகை ரூ. 1,500 என நிர்ணயம் செய்தும் தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 6

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட வார்டு எண் 61 ல் உள்ள குப்பை மாற்று நிலையத்தைச் சுற்றி சுற்றுச்சுவர் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ. 66,90,000 க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மாமன்ற கூட்டத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 12550/2012/MD2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 324 நாள் 31.01.2013**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 7

கோவை மாநகராட்சிக்கென தனி குடிநீர் திட்டமான பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. **113.74** கோடி செலவில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, குடிநீர் திட்டப் பணியினை ஆறு சிப்பங்களின் பணி முடிவுற்ற நிலையில் I-வது சிப்பப்பணியான பில்லூர் அணைக்கட்டிலிருந்து பெரியகோம்பை குகை நுழைவு வாயில் வரை குடிநீர் கொண்டு செல்லும் பணி தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியில் பில்லூர் அணைப்பகுதியின் கரை பகுதியில், புதியதாக நீர் சேகரிப்பு கிணறு, நீரேற்று அறை அமைக்கப்பட்டுள்ள இடத்தில் வன விலங்குகள் வருவதால் அப்பகுதியில் பாதுகாப்பிற்காக நிலையத்தினை சுற்றி சுற்றுசுவர் கட்டுவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதீப்பீட்டு தொகை ரூ. **75.00** லட்சத்திற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டியும், இச்செலவினத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்ற ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| **பணியின் பெயர்** | **உத்தேச மதிப்பீடு தொகை** |
|---|---|
| பில்லூர் அணைப்பகுதியில் நீரேற்று கிணறு அமைந்துள்ள இடத்தினை சுற்றி சுற்றுசுவர் கட்டுதல் பணி. | 75.00 லட்சம் |

அலுவலகக் குறிப்பு: அ) பில்லூர் அணைப்பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான நீர் சேகரிப்பு கிணறு அமைத்துள்ள இடத்தினை சுற்றி சுற்றுசுவர் கட்டுதல் பணிக்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. 75.00 இலட்சத்திற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) மேற்படி பணிக்கு ஏற்படும் செலவீனத்தை மாநகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 9190/02/ஜே.என்5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 325 நாள் 31.01.2013**

அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆ விற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சியின் எல்லை விரிவாக்கத்திற்கு முன்பிருந்த மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் தங்கு தடையின்றி, சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு ரூ. 641 கோடி மதிப்பில் செயல்படுத்தப்படவுள்ள "24x7 குடிநீர் விநியோகத்திட்டத் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனமான தி/ள். பிட்சனர் கன்சல்ட்டிங் (இந்தியா) பிரைவேட். லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிறுவனம் தயாரித்துள்ள விரிவான திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள புதிதாக பதிக்கப்படவுள்ள குழாய்களின் வகை, தரம் குறித்தான வடிவமைப்புகள் மற்றும் புதிதாக கட்டப்படவுள்ள மேல்நிலைத் தொட்டிகளின் அமைவிடம், கொள்ளளவு மற்றும் உயரம் குறித்தான வடிவமைப்புகள் உள்ளிட்ட அனைத்து வடிவமைப்புகளின் உண்மை நிலையினை உறுதிபடுத்தவும், மத்திய, மாநில அரசுகளின் உயரதிகாரிகளுக்கு தேவையான விளக்கங்களை அளித்து மேற்படி விரிவான திட்ட அறிக்கை ஒப்புதல் பெற அனைத்து வகைகளிலும் உதவி புரியும் பணியை மேற்கொள்ளவும், ஆலோசனை நிறுவனம் ஒன்றை நியமிக்க கடந்த 23.04.2012 தேதியன்று நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரையின் அடிப்படையில், மேற்படி பணிக்கு ஆலோசனை நிறுவனத்தினை (Transaction Advisor) ஒப்பந்தப்புள்ளி கோரி நியமனம் செய்ய மாமன்றம் தனது தீர்மான எண் 85, நாள் 01.06.2012–ல் அனுமதி வழங்கியது. அதன்படி ஆலோசக நிறுவனத்தை நியமனம் செய்வதற்காக கடந்த 12.10.2012–ம் தேதியில் கோரப்பட்ட தேசிய அளவிலான ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கீழ்கண்ட நான்கு நிறுவனங்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி வழங்கியது.

1) M/s. Infra En consulting Private Ltd., - M/s. HMR Environmental Engineering Consultants LLC (JV), Bangalore.
2) M/s. Shah Technical Consultants (P) Ltd. – M/s DRA Consultants Private Ltd., (JV), Mumbai.
3) M/s. CRISIL Risk and Infrastructure Solutions Ltd. – M/s. Tata Consulting Engineers Ltd. (JV), Hyderabad.
4) M/s. Infrastructure Management and Advisory Services Pvt. Ltd. – M/s. CRP Technologies (India) Limited (JV), Chennai.

மேற்படி நிறுவனங்கள் வழங்கிய தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள், ஒப்பந்தப்புள்ளி கூராய்வு குழுவின் மூலம் கூராய்வு செய்யப்பட்டதில் மேற்படி நான்கு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி பெற்றன. அந்நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிக்கான மதிப்பெண் (75 மதிப்பெண்) விபரம் பின்வருமாறு.

<u>பட்டியல் – I</u>

| வ. எண் | ஒப்பந்த நிறுவனம் | தொழில்நுட்ப தகுதியின் அடிப்படையில் பெற்ற மதிப்பெண் (75) |
|---|---|---|
| 1 | M/s. Infra En consulting Private Ltd., - M/s. HMR Environmental Engineering Consultants LLC(JV), Bangalore. | **65.625** |
| 2 | M/s. Shah Technical Consultants (P) Ltd. – M/s DRA Consultants Private Ltd., (JV), Mumbai. | **47.625** |
| 3 | M/s. CRISIL Risk and Infrastructure Solutions Ltd. – M/s. Tata Consulting Engineers Ltd. (JV), Hyderabad. | **47.438** |
| 4 | M/s. Infrastructure Management and Advisory Services Pvt. Ltd. – M/s. CRP Technologies (India) Limited (JV), Chennai. | **46.313** |

தொழில்நுட்ப தகுதி பெற்ற மேற்படி நான்கு நிறுவனங்களின் விலை விகிதங்கள் குறித்தான ஒப்பந்தப்புள்ளிகள் கடந்த **23.11.2012–ல்** திறக்கப்பட்டதில் பின்வருமாறு விலைகளை நிறுவனங்கள் வழங்கியிருந்தன.

<u>பட்டியல் – II</u>

| வ. எண் | ஒப்பந்த நிறுவனம் | நிறுவனம் குறிப்பிட்டுள்ள தொகை | விலை விகிதத்திற்கான மதிப்பெண் (25) |
|---|---|---|---|
| 1 | M/s. Infra En consulting Private Ltd., - M/s. HMR Environmental Engineering Consultants LLC(JV), Bangalore. | ரூ.**49,50,000.00/–** | **14.909** |
| 2 | M/s. Shah Technical Consultants (P) Ltd. – M/s DRA Consultants Private Ltd., (JV), Mumbai. | ரூ.**56,78,000.00/–** | **12.998** |
| 3 | M/s. CRISIL Risk and Infrastructure Solutions Ltd. – M/s. Tata Consulting Engineers Ltd. (JV), Hyderabad. | ரூ.**47,95,000.00/–** | **15.391** |
| 4 | M/s. Infrastructure Management and Advisory Services Pvt. Ltd. – M/s. CRP Technologies (India) Limited (JV), Chennai. | ரூ.**29,52,000.00/–** | **25.000** |

மேற்கண்ட நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதியின் அடிப்படையில் வழங்கப்பட்ட மதிப்பெண் (பட்டியல் –I) மற்றும் மேற்படி நிறுவனங்கள் வழங்கிய விலைகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட மதிப்பெண் (பட்டியல் –II) அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் கூராய்வு செய்ததில், மேற்படி நிறுவனங்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் நிறுவனங்களின் தர நிலை கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்த நிறுவனம் | நிறுவனம் குறிப்பிட்டுள்ள தொகை ரூ. | தொழில்நுட்ப தகுதிக்கான மதிப்பெண் (75) | விலை விகிதத்திற்கான மதிப்பெண் (25) | மொத்த மதிப்பெண் (100) | தர நிலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | M/s. Infra En consulting Private Ltd., - M/s.HMR Environmental Engineering Consultants LLC(JV), Bangalore. | 49,50,000.00/– | 65.625 | 14.909 | 80.534 | L1 |
| 2 | M/s. Infrastructure Management and Advisory Services Pvt. Ltd. – M/s. CRP Technologies (India) Limited (JV), Chennai. | 29,52,000.00/– | 47.625 | 12.998 | 71.313 | L2 |
| 3 | M/s. Shah Technical Consultants (P) Ltd. – M/s DRA Consultants Private Ltd., (JV), Mumbai. | 56,78,000.00/– | 47.438 | 15.391 | 60.623 | L3 |
| 4 | M/s. CRISIL Risk and Infrastructure Solutions Ltd. – M/s. Tata Consulting Engineers Ltd. (JV), Hyderabad. | 47,95,000.00/– | 46.313 | 25.000 | 62.829 | L4 |

ஒப்பந்த விதிகளின்படி (Bid Document) அதிக மதிப்பெண் பெற்று "L1" நிலை பெற்ற M/s. Infra En consulting Private Ltd., - M/s. HMR Environmental Engineering Consultants LLC(JV), Bangalore நிறுவனத்திடம் கீழ்கண்ட விபரப்படி விலைகுறைப்பு செய்திட கோரப்பட்டதில், அந்நிறுவனம் கொடுத்த விலைகுறைப்பு விபரம் பின்வருமாறு.

| ஒப்பந்ததாரரின் பெயர் | நிறுவனம் குறிப்பிட்டுள்ள தொகை | விலைகுறைப்பு விபரம் | | விலைகுறைப்பிற்கு பின் ஒப்பந்தத் தொகை |
|---|---|---|---|---|
| | | நாள் | குறைக்கப்பட்ட விலை | |
| M/s. Infra En consulting Private Ltd., - M/s. HMR Environmental Engineering Consultants LLC(JV), Bangalore. | ரூ.49,50,000.00/– | 1) 30.11.2012<br>2) 06.12.2012<br>3) 10.12.2012<br>4) 18.12.2012 | ரூ.1,00,000.00<br>ரூ.1,00,000.00<br>ரூ.1,00,000.00<br>---- | ரூ.48,50,000.00/–<br>ரூ.47,50,000.00/–<br>ரூ.46,50,000.00/–<br>**ரூ.46,50,000.00/–** |

M/s. Infra En consulting Private Ltd., - M/s. HMR Environmental Engineering Consultants LLC(JV), Bangalore நிறுவனத்தின் மூன்றாவது விலை குறைப்பிற்கு பின்னர் (ரூ. 46,50,000/–) மேலும் விலைகுறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துவிட்ட காரணத்தால் மேற்படி நிறுவனத்தின் இறுதி ஒப்பந்த விலை குறித்து பரிசீலித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

அ) 24 x 7 குடிநீர் திட்டத்தின் விரிவான திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளின் வடிவமைப்புகளை கூராய்வு செய்து உறுதிபடுத்தி, திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் பெற உதவி புரியும் பொருட்டு ஆலோசனை நிறுவனத்தினை (Transaction Advisor) நியமிக்கும் பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதத்தில் (ரூ.46,50,000.00/–) ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s. Infra En consulting Private Ltd., - M/s. HMR Environmental Engineering Consultants LLC(JV), Bangalore நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) மேற்படி பணிக்கு ஏற்படும் செலவீனத்தை மாநகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 2896/08/ஜேஎன்5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 326 நாள் 31.01.2013**

அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆ விற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 9

கோவை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம். ரூ. 377.13 கோடி மதிப்பில் மேற்கொள்ள அரசு ஆணை (3டி) எண். 25, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி–3) துறை நாள்: 24.10.2007–மூலம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

இத்திட்டப்பணி ஆறு சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டதில், மூன்றாவது சிப்பப்பணியான **297.47** கி. மீ நீளத்திற்கு கழிவு நீர் சேகரிப்பு குழாய்கள் அமைக்கும் பணிக்கு ரூ. **113.33** கோடி மதிப்பில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளரால் கடந்த **13.05.2008** அன்று தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் **29.04.2009** தேதியில் மூன்றாவது முறையாக கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் குறைந்த விலை விகிதத்தில் (ரூ. **122,05,46,256.00**) ஒப்பந்தப்புள்ளி கொடுத்த தி/ள். டி.வி.ஆர்.சி.பி.எல்–ஹெச்.என்.பி.இ.பி.எல். (ஜே.வி.), ஹைதராபாத் (M/s. TVRCPL – HNBEPL (JV), Hyderabad) என்ற நிறுவனத்திற்கு **24.08.2009** தேதியில் பணி உத்தரவு வழங்கப்பட்டு மேற்படி பணியை **30** மாதங்களில் செய்து முடிக்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், **27** மாத காலம் முடிவடைந்த நிலையிலும், மேற்படி நிறுவனத்தால் **75.90** கிமீ. நீளத்திற்கு மட்டுமே கழிவு நீர் குழாய்கள் பதிக்கப்பட்ட நிலையில் மேற்படி நிறுவனம் கடந்த ஆகஸ்ட்–**2011** முதல் பணிகளை மேற்கொள்ளாமல் நிறுத்தி விட்ட காரணத்தால் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தம் மாமன்ற ஒப்புதலுடன் கடந்த **16.12.2011**–ல் ரத்து செய்யப்பட்டது.

எனவே, மேற்படி சிப்ப பணிக்கு மீதமுள்ள கழிவு நீர் குழாய்கள் அமைக்கும் பணிகளுக்கு ரூ. **129.00** கோடி மதிப்பில் தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டிற்கு **16.02.2012** தேதியில் மாமன்றம் தனது தீர்மான எண்:196, நாள்: 29.12.2011–ல் ஒப்புதல் வழங்கியதையடுத்து, உரிய தொழில்நுட்ப அனுமதி பெற்று கடந்த **11.04.2012** தேதியில் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கீழ்கண்ட இரு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி வழங்கியது.

1. தி/ள். எஸ்.இ.டபிள்யூ – ஏ.ஐ.பி.பி.எல் (ஜேவி), ஹைதராபாத்.
   (M/s. SEW – AIPPL(JV), Hyderabad)
2. தி/ள். ராம்கி இன்ப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட், ஹைதராபாத்.
   (M/s. Ramky Infrastructure Limited, Hyderabad)

மேற்கண்ட இரு நிறுவனங்களின் தொழில் நுட்ப தகுதி குறித்து கூராய்வு செய்யும் பணி நடைபெற்று வந்த நிலையில் மேற்படி நிறுவனங்களில் ஒன்றான தி/ள். ராம்கி இன்ப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட், ஹைதராபாத் நிறுவனம் தனது ஒப்பந்தப்புள்ளியின் **"செல்லத்தக்க கால அளவினை (Bid Validity Period)"** நீட்டிப்பு செய்து தர மறுத்து விட்டதால், மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை நிராகரித்து, எஞ்சியுள்ள நிறுவனமான தி/ள். எஸ்.இ.டபிள்யூ – ஏ.ஐ.பி.பி.எல் (ஜேவி), ஹைதராபாத் (M/s. SEW – AIPPL (JV), Hyderabad) நிறுவனத்தின் விலைகள் குறித்தான ஒப்பந்தப்புள்ளி (Price Bid) கடந்த **31.12.2012** அன்று திறக்கப்பட்டதில், மேற்படி நிறுவனம் குறிப்பிடப்பட்டிருந்த விலை விபரமும், அதன்பின் விலை குறைப்பு செய்திட மாநகராட்சியால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக அந்நிறுவனத்தால் வழங்கப்பட்ட விலை விபரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | நிறுவனம் | ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகை | நிறுவனம் வழங்கிய ஒப்பந்த விலைப்புள்ளி விபரம் | நிறுவனம் வழங்கிய விலைகுறைப்பு விபரம் & **தே** | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு (கூடுதல்) சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | தி/ள். எஸ்.இ.டபிள்யூ – ஏ.ஐ.பி.பி.எல் (ஜேவி), ஹைதராபாத் | ரூ. **1108389644.26** | ரூ. **1437640583.33** | | 29.71% |
| 2 | | | | முதலாவது விலை குறைப்பிற்கு பின் **(02.01.2013)** ரூ. **143,75,00,000** | 29.69% |
| 3 | | | | இரண்டாவது விலை குறைப்பிற்கு பின் (07.01.2013) ரூ.**143,72,50,000** | 29.67% |
| 4 | | | | மூன்றாவது விலை குறைப்பிற்கு பின் (08.01.2013) ரூ. 143,70,00,000 | 29.65% |
| 5 | | | | நான்காவது விலை குறைப்பிற்கு பின் (11.01.2013) ரூ. 143,65,00,000 | 29.60% |

மேற்படி நிறுவனத்திடமிருந்து நான்காவது முறையாக பெறப்பட்ட விலைக்குறைப்புக்கு பின்னர், **11.01.2013–ந்** தேதியில் ஐந்தாவது முறையாக விலை குறைப்பு செய்திட மாநகராட்சியால் கோரப்பட்டதில், தற்போது கட்டுமான பொருட்களின் விலைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக, இதற்கு மேல் (ரூ. **143,65,00,000)** தங்களால், மேலும் விலை குறைப்பு செய்திட இயலாது என மேற்படி நிறுவனம் தனது கடித நாள்: 15.01.**2013** மூலமாக தெரிவித்துவிட்ட காரணத்தால், மேற்படி நிறுவனத்தால் வழங்கப்பட்ட இறுதி ஒப்பந்த தொகையினை (ரூ. **143,65,00,000)** ஏற்பது குறித்து **"மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின்"** முடிவிற்காக முன்மொழிவுகள் அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

**அ)** மேற்கண்ட பணிக்கு தி/ள். எஸ்.இ.டபிள்யூ – ஏ.ஐ.பி.பி.எல் (ஜேவி), ஹைதராபாத் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்புத்தொகையான ரூ. **143,65,00,000/–** ஐ, **2011–12** ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித்துறையின் தரப்படுத்தப்பட்ட விலை அட்டவணையின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு ஒப்பீடு செய்யப்பட்டதில், மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட **29.60%** சதவீதம் கூடுதலாக உள்ளது. இருப்பினும், நடப்பாண்டான **2012–13** ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித்துறையின் தரப்படுத்தப்பட்ட விலை அட்டவணையின்படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டின் விலை விகிதத்தோடு ஒப்பீடு செய்யப்பட்டதில், மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட **12.30%** சதவீதம் மட்டுமே கூடுதலாக இருப்பதால் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை **"மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு"** வின் பரிசீலனைக்கு அனுப்பவும், குழு மேற்கொள்ளும் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ஆ)** மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு கூடுதலான விலை விகிதத்தில் வழங்கப்பட்டுள்ள (மதிப்பீட்டிற்கு **29.60%** கூடுதல்) மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பதால் ஏற்படும் கூடுதல் செலவீனத்தை, மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க எண். 244/2012/ஜேஎன்4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 327 நாள் 31.01.2013**

அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆ விற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 10

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு எண்.26 மற்றும் 43வது வார்டுகளிலுள்ள கீழ்கண்ட பணிகளை தி/ள்.அய்யப்பா அசோசியேட்ஸ் ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பணி ஒப்படைப்பு செய்ததில் பணியினை துவங்காததால் ஒப்பந்ததாரர் பதிவை ரத்து செய்யவும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்றத்திற்கு பொருள் வைத்தல் - தொடர்பாக

**பணிகளின் விவரம்**

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.43 உழைப்பாளர் வீதியில் சிறுபாலம் திரும்பக் கட்டுதல் ந.க.எண்.5344/2012/டி1(வ) | 1.21 | தி/ள்.அய்யப்பா அசோசியேட்ஸ் |
| 2 | வார்டு எண்.26 தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதி-I சமுதாய கூடத்திற்கு சுற்று சுவர் கட்டுதல் ந.க.எண்.5338/2012/டி1(வ) | 4.75 | தி/ள்.அய்யப்பா அசோசியேட்ஸ் |
| 3 | வார்டு எண்.43 மாரியம்மன் கோவில் அருகிலுள்ள கிணற்றுநீர் மேல்நிலை தொட்டி மராமத்து பணி செய்தல் ந.க.எண்.5343/2012/டி1(வ) | 4.20 | தி/ள்.அய்யப்பா அசோசியேட்ஸ் |
| 4 | வார்டு எண்.26 தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதி-Iல் சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு திடல் அமைத்தல் ந.க.எண்.5339/2012/டி1(வ) | 5.00 | தி/ள்.அய்யப்பா அசோசியேட்ஸ் |

மேற்குறிப்பிட்ட நான்கு பணிகளுக்கு 25.05.12ம் தேதி அறிவிப்பு வழங்கப்பட்டது. அவ்வறிவிப்பின்படி ஒப்பந்ததாரா் 05.06.12ம் தேதி ஒப்பந்தப்பத்திரம் சமா்ப்பிக்கப்பட்டுள்ளதால், ஒப்பந்ததாரருக்கு மேற்குறிப்பிட்ட பணிகளை துவங்குவதற்கு 06.06.12ம் தேதி பணி உத்தரவு வழங்கப்பட்டது.

பணிகளை துவக்குமாறு 17.10.12 மற்றும் 01.11.12ம் தேதிகளில் அறிவிப்புகள் அனுப்பப்பட்டது. அறிவிப்புகளை பெற்ற ஒப்பந்ததாரா் பணியினை துவங்காததால் அவருக்கு 17.12.12ம் தேதி இறுதி அறிவிப்பு வழங்கப்பட்டது. இறுதி அறிவிப்பை பெற்ற ஒப்பந்ததாரா் இதுவரை பணியினை துவங்கவில்லை.

இறுதி அறிவிப்பில் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் பணியினை துவங்காததால் ஒப்பந்தப்புள்ளி விதிகள் 47-ன் படி ஒப்பந்ததாரா் தி/ள்.அய்யப்பா அசோசியேட்ஸ் அவா்களை ஒப்பந்ததாரா் பட்டியலிலிருந்து நீக்கம் செய்து கருப்பு பட்டியலில் சோ்க்கப்படும், மேற்படி பணிகளுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரும்போது ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் ஒப்பந்ததாரரே பொறுப்பாக்கப்படும், அனைத்து பணிகளுக்கும் செலுத்திய டேவணித் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை 5% பிடித்தம் செய்யப்பட்டுள்ள தொகை ஆகியவற்டிற பறிமுதல் செய்து மாநகராட்சி கணக்கில் சோ்க்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே ஒப்பந்ததாரருடைய ஒப்பந்தத்தை ரத்து செய்து கருப்பு பட்டியலில் சோ்க்கவும், பணிகளுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரும்போது ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் ஒப்பந்ததாரரை பொறுப்பாக்கவும், அனைத்து பணிகளுக்கும் செலுத்தியுள்ள தொகைகளை பறிமுதல் செய்து மாநகராட்சி இருப்பில் வைக்கவும், மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.5344/2012/டி1(வ)

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 328 நாள் 31.01.2013</u>**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி அளித்து தீா்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 11**

பொருள்: கோயம்புத்தூா் மாநகராட்சி – நகரமைப்பு பிரிவு – சிறைத்துறைக்கு சொந்தமான இடத்தில் செம்மொழி பூங்கா அமைக்க பெறப்பட்ட அரசாணையில் மாற்று உபயோகம் கோரியது – **5.63** ஏக்கா் இடத்தில் உள்விளையாட்டு அரங்கம் மற்றும் நீச்சல் குளம் அமைத்து பராமரித்தல் மற்றும் வருவாயினை மாநகராட்சியும் விளையாட்டு துறையும் பங்கீடு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக**.**

*******

கோயம்புத்தூா் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட உள்சிறைத்துறைக்கு சொந்தமான **45.25** ஏக்கா் நிலத்தினை செம்மொழி பூங்கா அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையரின் பெயருக்கு நிலம் மாற்றம் செய்ய அரசாணை (நிலை) எண்.**350**, உள் (சிறை.**4)** துறை, நாள்.**06.04.2010** -ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது**.** மேற்படி இடத்தில் செம்மொழி பூங்கா பணிகள் எதுவும் நடைபெறாத காரணத்தால் செம்மொழி பூங்காவிற்கு பதிலாக அருகில் உள்ள மிருக காட்சி சாலைக்கு கூடுதல் விரிவாக்கத்திற்கு இடம் தேவைப்படுவதாலும், மிருக காட்சி விஸ்தரிப்பிற்கும், பொழுது போக்கு பூங்காவிற்கும், உலகத் தரம் வாய்ந்த உள் விளையாட்டு அரங்கம் மற்றும் நீச்சல் குளம் அமைக்கவும் மற்றும் அணுகு சாலை அமைக்கவும் மேற்படி அரசாணையில் திருத்தம் செய்து மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய நகராட்சி நிர்வாக ஆணையருக்கு பரிந்துரை செய்ய கேட்டு மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது**.**

இதில் உலகத் தரம் வாய்ந்த உள் விளையாட்டு அரங்கம் மற்றும் நீச்சல் குளம் அமைக்க விளையாட்டு துறைக்கு **3.80** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது**.** எனவே, **5.63** ஏக்கா் நிலத்தில் உள் விளையாட்டு அரங்கம் மற்றும் நீச்சல் குளம் ஆகியவற்றை அமைக்க விளையாட்டு துறைக்கு அனுமதி வழங்கவும், கட்டுமானத்திற்கு பின்பு பராமரிப்பு பணிகளை மாநகராட்சி மேற்கொள்ளவும், மேலும் இதன் மூலம் வரும் வருவாயை மாநகராட்சி மற்றும் விளையாட்டு துறை சரிபாதியாக பகிர்ந்து கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது**.**

அலுவலகக் குறிப்பு:- அனுமதிக்கலாம்**.** ந.க.எண்.**8336 /2011/**எம்.எச்.**5**

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 329 நாள் 31.01.2013</u>**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி அளித்து தீா்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 12**

**பொருள்** கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட மற்றும் வடவள்ளி பகுதிகளுக்குட்பட்ட வார்டு எண் 5,6,7,8,9,16 மற்றும் 17 க்குட்பட்ட பகுதிகளில் - குடிநீர் விநியோக பகிர்மான குழாய்கள் வடிவமைத்து – விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய விருப்பு கேட்பு அறிக்கை (EOI) வரவேற்கப்பட்டு ஆலோசகர்கள் நியமனம் செய்யவும் - தொகை வழங்கவும் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

--------------

கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண் 5,6,7,8,9,16 மற்றும் 17 பகுதிகளான கவுண்டம்பாளையம் மற்றும் வடவள்ளி பகுதிகளில், கவுண்டம்பாளையம், வடவள்ளி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் (TNUDP-III) கீழ் பவானி ஆற்றிலிருந்து குடிநீர் எடுக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ரூ.3038.00 லட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணி முடிக்கப்பட்டு, தற்போழுது திட்டம் செயல்பாட்டில் இருந்து வருகிறது. மேற்கண்ட திட்டத்தில் கவுண்டம்பாளையம் பகுதியில் 7 மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளும் வடவள்ளி பகுதியில் 8 மேல்நிலை நீர்தேக்ககளும் புதிதாக கட்டப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தில் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளிலிருந்து பிரதான குழாய்கள் மட்டும் அமைக்கப்பட்டு பழைய விட்ட அளவிளான குடிநீர் பகிர்மான குழாய்களில் இணைக்கப்பட்டு பணி முடிக்கப்பட்டள்ளது. மேற்க்கண்ட பகுதிகளில் புதிதாக குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைக்கப்படாததால் பழைய விட்ட அளவிளான குடிநீர் பகிர்மான குழாயின் மூலமாகவே குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் பழைய விட்ட அளவிளான பகிர்மானக் குழாய்களில் கிணற்று நீர் விநியோகம் மற்றும் குடிநீரும் விநியோகம் செய்யப்பட்டு வருவதால் பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலையில் உள்ளது.

எனவே வார்டு எண் 5,6,7,8,9,16 மற்றும் 17க்குட்பட்ட பகுதிசகளில் மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளிலிருந்து விநியோகப் பகுதிகளுக்கு 24X7 திட்டத்தின் குடிநீர் விநியோகம் செய்யக் கூடிய அளவிற்க்கு குழாய் வடிவமைப்பு செய்து சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய விருப்பக்கேட்பு அறிக்கை (EOI) வரவேற்கப்பட்டு ஆலோசகர்களை நியமனம் செய்யவும் அதற்கான தொகை வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்க ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்** **ந.க.எண் 648/ 2013 /எம்.டி.1**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 330 நாள் 31.01.2013</u>**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 13**

கோவை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம். ரூ. **377.13** கோடி மதிப்பில் மேற்கொள்ள அரசு ஆணை **(3டி)** எண். **25**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி**–3)** துறை நாள்: 24.10.2007–மூலம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இத்திட்டப்பணி ஆறு சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டதில், ஆறாவது சிப்ப பணியான ஒண்டிப்புதூர் பகுதியில் **60** எம்.எல்.டி. கொள்ளளவு கொண்ட நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு கடந்த **5.12.2012–**ல் கோரப்பட்ட முதலாவது ஒப்பந்த அழைப்பில் கீழ்கண்ட மூன்று நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியிருந்தன.

1. திரு. ராம்கி இன்ப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட், ஹைதராபாத்.
   (M/s. Ramky Infrastructure Limited, Hyderabad)
2. திரு. ஹெ.ச்.என்.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், புனே.
   (M/s. HNB Engineers Pvt. Limited, Pune)
3. திரு. கார்புரே இன்ஜினியரிங் & கன்ஸ்ட்ரக்சன்ஸ், பி,லிட்,. புனே.
   (M/s.Gharpure Engineering & Constructions Pvt.Limited, Pune)

மேற்படி மூன்று நிறுவனங்களில் ஒன்றான திரு. ஹெ.ச்.என்.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், புனே என்ற நிறுவனம் ஏற்கனவே இம்மாநகராட்சியால் செயல்படுத்தப்பட்டு வரும் பாதாள சாக்கடை திட்டப் பணியில், மூன்றாவது சிப்ப பணியை பாதியிலே நிறுத்திவிட்டு சென்ற காரணத்தால் மேற்படி நிறுவனம் (M/s. HNB Engineers Pvt. Limited, Pune) மற்றும் அதன் கூட்டு நிறுவனத்தின் (M/s. TVR Constructions Pvt. Limited, Hyderabad) ஒப்பந்தம் மாமன்றத்தின் தீர்மானம் எண். **145** , நாள்: 30.11.2011 மூலம், ரத்து செய்யப்பட்டு மேற்படி இரு நிறுவனங்களையும் கருப்பு பட்டியலில் சேர்க்க மாநில அரசிற்கு மாநகராட்சியால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதால் தற்போது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு திரு. ஹெ.ச்.என்.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், புனே நிறுவனத்தால் வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தப்புள்ளியை நிராகரித்து, மீதமுள்ள இரு நிறுவனங்களின் விலைகள் குறித்தான ஒப்பந்தப்புள்ளிகள் (Financial Bids) திறக்கப்பட்டதில் மேற்படி நிறுவனங்கள் வழங்கிய விலை விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**ஒப்புநோக்குப் பட்டியல்**

| வ. எண் | நிறுவனம் | ஒப்பந்த மதிப்பு | | ஒப்பந்த விலை புள்ளி விபரம் | | கூடுதல் ஒப்பந்த சதவீதம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | கட்டுமான பணிக்கு (ரூ. இலட்சத்தில்) | இயக்கம் மற்றும் பராமரிப்பு (ரூ. இலட்சத்தில்) | கட்டுமானப் பணிகள் (ரூ. இலட்சத்தில்) | 5 வருட காலத்திற்கு இயக்கம் & பராமரிப்பு (ரூ. இலட்சத்தில்) | கட்டுமானப் பணி | இயக்கம் மற்றும் பராமரிப்பு |
| 1. | தி/ள். ராம்கி இன்பராஸ்ட்ரக்சர்ஸ் லிமிடெட், ஹைதராபாத், | 6460.00 | 840.00 | 7934.00 | 1191.18 | மதிப்பீட்டிற்கு 22.82 % கூடுதல் | மதிப்பீட்டிற்கு 41.81 % கூடுதல் |
| 2. | தி/ள். கார்புரே இன்ஜினியரிங் & கன்ஸ்ட்ரக்சன்ஸ், (பி) லிட்,. புனே. | | | 7425.00 | 987.78 | **மதிப்பீட்டிற்கு 14.94 % கூடுதல்** | **மதிப்பீட்டிற்கு 17.59 % கூடுதல்** |

மேற்கண்ட நிறுவனங்களில், குறைந்த விலை விகிதத்தில் ஒப்பந்தபுள்ளி வழங்கிய "தி/ள். கார்புரே இன்ஜினியரிங் & கன்ஸ்ட்ரக்சன்ஸ், பி,லிட்,. புனே'' நிறுவனத்திடம், பொறியியல் நடை முறை விதிகளின் படி விலை குறைப்பு கோரப்பட்டதில், மேற்படி நிறுவனத்தால் வழங்கப்பட்ட விலை குறைப்பு விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| **வ. எண்** | **நிறுவனம்** | **கட்டுமானப்பணி** | | **இயக்கம் மற்றும் பராமரிப்பு** | |
|---|---|---|---|---|---|
| | | **விலை (ரூ.)** | **மதிப்பீட்டிற்கு கூடுதல் சத□த□** | **விலை (ரூ. )** | **மதிப்பீட்டிற்கு கூடுதல் சத□த□** |
| 1 | தி/ள். கார்புரே இன்ஜினியரிங் & கன்ஸ்ட்ரக்சன்ஸ், பி,லிட்,. புனே. | முதலாவது விலை குறைப்புக்கு பின் (நாள்: 17.01.2013) ரூ. 70,93,08,000 | 9.80% கூடுதல் | முதலாவது விலை குறைப்புக்கு பின் (நாள்: 17.01.2013) ரூ. 9,22,32,000 | 9.80 % கூடுதல் |
| | | இரண்டாவது விலை குறைப்புக்கு பின் (நாள்: 18.01.2013) ரூ. 67,82,35,400 | 4.99% கூடுதல் | இரண்டாவது விலை குறைப்புக்கு பின் (நாள்: 17.01.2013) ரூ. 8,81,91,600 | 4.99 % கூடுதல் |

மேற்கண்ட நிறுவனத்திடம் மேலும் விலைகுறைப்பு செய்து வழங்கிட கடந்த 18.01.2012 அன்று மாநகராட்சியால் கோரப்பட்டதில், மேற்படி நிறுவனம் தனது 21.01.2013–ந் தேதிய கடிதத்தில் கட்டுமான பொருட்களின் விலையேற்றம் காரணமாக, தங்களால் இறுதியாக குறிப்பிட்டுள்ள தொகையை விட (கட்டுமான பணிக்கு ரூ. 67,82,35,400.00 மற்றும் இயக்கம் & பராமரிப்பு பணிக்கு ரூ. 8,81,91,600.00) மேலும் விலை குறைப்பு செய்திட இயலாது என தெரிவித்து விட்டது.

எனவே கட்டுமானப் பணி மற்றும் இயக்கம் & பராமரிப்பு பணிகளுக்கு மதிப்பீட்டு விகிதத்தைவிட 4.99% கூடுதலான விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி வழங்கிய தி/ள். கார்புரே இஞ்சினியரிங் & கன்ஸ்ட்ரக்சன்ஸ், பி,லிட்,. புனே நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1) ஒண்டிபுதூர் பகுதியில் 60 எம்.எல்.டி கொள்ளளவுள்ள நவீன சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு குறைந்த விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்தின் **(தி/ள். கார்புரே இன்ஜினியரிங் & கன்ஸ்ட்ரக்சன்ஸ், பி,லிட்,. புனே)** இறுதி விலை குறைப்பிற்கு பின், கட்டுமான பணிக்கு ரூ. 67,82,35,400/– (மதிப்பீட்டிற்கு 4.99 % கூடுதல்) மற்றும் இயக்கம் & பராமரிப்பு பணிகளுக்கு ரூ. 8,81,91,600/– (மதிப்பீட்டிற்கு 4.99 % கூடுதல்) ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **தி/ள். கார்புரே இன்ஜி னியரிங் & கன்ஸ்ட்ரக்சன்ஸ், பி,லிட்,. புனே** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) இயக்கம் & பராமரிப்பு பணிகளுக்காக ஏற்படவுள்ள உத்தேச செலவீனம் ரூ. 882 இலட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப்பணி மற்றும் இயக்கம் & பராமரிப்பு பணிகளுக்கு மதிப்பீட்டை விட கூடுதலான விலைவிகிதத்தில் (மதிப்பீட்டிற்கு 4.99 % கூடுதல்) கொடுக்கப்பட்டுள்ள **" தி/ள். கார்புரே இன்ஜி னியரிங் & கன்ஸ்ட்ரக்சன்ஸ், பி,லிட்,. புனே"** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பதால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பாதாள சாக்கடை திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டினை விட கூடுதலாக ஏற்படும் செலவீனத்தை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க. எண் : 494/2009/ஜேஎன். 4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 331 நாள் 31.01.2013</u>**

அலுவலகக் குறிப்பு 1,2,3- ற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 14**

கோவை மாநகராட்சிக்கென தனி குடிநீர் திட்டமான பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, குடிநீர் திட்டப் பணியில் ஆறுசிப்பங்களின் பணி முடிவுற்ற நிலையில் I-வது சிப்பப்பணியான பில்லூர் அணைக்கட்டிலிருந்து பெரியகோம்பை குகை நுழைவு வாயில் வரை குடிநீர் கொண்டு செல்லும் பணி தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியில் பில்லூர் அணைப்பகுதியின் கரை பகுதியில், புதியதாக அமைக்கப்பட்டுள்ள நீர் சேகரிப்பு கிணறு, நீரேற்று அறை நிலையத்தில் 24 மணி நேரம் மோட்டார் இயந்திரங்கள் இயங்க வேண்டியுள்ளதால் பணியாளர்கள் அங்கு தங்கி பார்வையிட்டு இயக்கி பராமரிக்கும் பொருட்டு குடியிருப்புகள் கட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சீராக தண்ணீர் வழங்க வழிவகை செய்ய பணியாளர்களின் குடியிருப்பு A Block (கீழ்தளம் மற்றும் முதல் தளம்) கட்டுவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதீப்பீட்டு தொகை ரூ. 75.00 லட்சத்திற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டியும், அச்செலவினத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்ற ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| **<u>பணியின் பெயர்</u>** | **<u>உத்தேச மதிப்பீடு தொகை</u>** |
|---|---|
| பில்லூர் அணைபகுதியில் நீரேற்று கிணறு அமைத்த இடத்திற்கு அருகாமையில் பணியாளர்களின் குடியிருப்பு A Block (கீழ்தளம் மற்றும் முதல் தளம்) கட்டுதல் பணி | ரூ. 75.00 லட்சம் |

அலுவலகக் குறிப்பு: அ) பில்லூர் அணைப்பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான நீர் சேகரிப்பு கிணறு அருகில் பணியாளர்கள் குடியிருப்பு A Block கட்டுவதற்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. 75.00 இலட்சத்திற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) மேற்படி பணிக்கு ஏற்படும் செலவீனத்தை மாநகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 9190/02/ஜே.என்5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 332 நாள் 31.01.2013</u>**

அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆ விற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 15**

கோவை மாநகராட்சிக்கென தனி குடிநீர் திட்டமான பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, குடிநீர் திட்டப் பணியினை ஆறுசிப்பங்களின் பணி முடிவுற்ற நிலையில் I-வது சிப்பப்பணியான பில்லூர் அணைக்கட்டிலிருந்து பெரியகோம்பை குகை நுழைவு வாயில் வரை குடிநீர் கொண்டு செல்லும் பணி தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியில் பில்லூர் அணைப்பகுதியின் கரை பகுதியில், புதியதாக நீர் சேகரிப்பு கிணறு, நீரேற்று அறை நிலையத்தில் 24 மணி நேரம் மோட்டர் இயந்திரங்கள் இயங்க வேண்டியுள்ளதால் பணியாளர்கள் அங்கு தங்கி பார்வையிட்டு இயக்கி பராமரிக்கும் பொருட்டு குடியிருப்புகள் கட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சீராக தண்ணீர் வழங்க வழிவகை செய்ய பொறியாளர்களின் குடியிருப்பு (கீழ்தளம் மற்றும் முதல் தளம்) கட்டுவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதீப்பீட்டு தொகை ரூ. 75.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டியும், அச்செலவினத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்ற ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| பணியின் பெயர் | உத்தேச மதிப்பீடு தொகை |
|---|---|
| பில்லூர் அணைப்பகுதியில் நீரேற்று கிணறு அமைத்த இடத்திற்கு அருகாமையில் பொறியாளர்களின் குடியிருப்பு கட்டுதல் பணி | 75.00 லட்சம் |

அலுவலகக் குறிப்பு: அ) பில்லூர் அணைப்பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான நீர் சேகரிப்பு கிணறு அருகில் பொறியாளர்கள் குடியிருப்பு கட்டுவதற்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.75.00 இலட்சத்திற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) மேற்படி பணிக்கு ஏற்படும் செலவீனத்தை மாநகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 9190/02/ஜே.என்5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 333 நாள் 31.01.2013**

அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆ விற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 16**

கோவை மாநகராட்சிக்கென தனி குடிநீர் திட்டமான பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, குடிநீர் திட்டப் பணியினை ஆறுசிப்பங்களின் பணி முடிவுற்ற நிலையில் I-வது சிப்பப்பணியான பில்லூர் அணைக்கட்டிலிருந்து பெரியகோம்பை குகை நுழைவு வாயில் வரை குடிநீர் கொண்டு செல்லும் பணி தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியில் பில்லூர் அணைப்பகுதியின் கரை பகுதியில், புதியதாக நீர் சேகரிப்பு கிணறு, நீரேற்று அறை நிலையத்தில் பணியாளர்களின் குடியிருப்பு பகுதியில் கான்கீரிட் சாலை, தெரு விளக்கு, சாலை தடுப்பு சுவர் கட்டுவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதீப்பீட்டு தொகை ரூ. 75.00 லட்சத்திற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டியும், அச்செலவினத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்ற ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| பணியின் பெயர் | உத்தேச மதிப்பீடு தொகை |
|---|---|
| பில்லூர் அணைபகுதியில் நீரேற்று கிணறு அமைத்த இடத்திற்கு அருகாமையில் கட்டப்படவுள்ள பணியாளர்களின் குடியிருப்பு பகுதியில் கான்கீரிட் சாலை, தெரு விளக்கு, சாலை தடுப்பு சுவர் கட்டும் பணி | 75.00 லட்சம் |

அலுவலகக் குறிப்பு: அ) பில்லூர் அணைபகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான நீர் சேகரிப்பு கிணறு அருகாமையில் கட்டப்படவுள்ள பணியாளர்களின் குடியிருப்பு பகுதியில் கான்கீரிட் சாலை, தெரு விளக்கு, சாலை தடுப்பு சுவர் கட்டுதல் பணிக்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. 75.00 இலட்சத்திற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) மேற்படி பணிக்கு ஏற்படும் செலவீனத்தை மாநகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 9190/02/ஜே.என்5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 334 நாள் 31.01.2013**

அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆ விற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 17**

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 59ல் மகாத்மா காந்தி ரோடு தார் சாலை அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.72,10,000- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மாமன்ற கூட்டத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 478/2013/MD2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 335 நாள் 31.01.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 18**

பொருள் - கோயம்புத்துர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வார்டு எண் 22 க்கு உட்பட்ட வடகோவை மேம்பாலம் மற்றும் பூங்கா மாநகராட்சியின் பராமரிப்பிற்கு நெடுஞ்சாலைத்துறையின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

------------------

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 22க்குட்பட்ட வடகோவை மேம்பாலம் மற்றும் சாலையோர பூங்கா உள்ளது. மேற்படி பூங்கா மற்றும் மேம்பாலம் பணியினை நெடுஞ்சாலைத்துறையின் அனுமதியுடன் கோயம்புத்துர் மாநகராட்சி பராமரிப்பு மேற்கொள்ள அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் /2013/MH5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 336 நாள் 31.01.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 19**

கோவை மாநகராட்சி பொறியியல் பிரிவு மத்திய மண்டலம் வார்டு எண் 52க்குட்பட்ட ஆவராம்பாளையம் சாலையின் சின்னசாமி சாலை முதல் சங்கனுர் பள்ளம் வரை மற்றும் பாலாஜி நகர் பிரதான சாலையில் Jnnurm திட்டத்தின் மூலம் பாதாள சாக்கடை குழாய்கள் அமைக்கும் பணிகள் முடிவுற்று குழாய்கள் பதிக்கப்பட்ட பகுதிகளில் கான்கிரீட் அமைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பிற பகுதிகள் சேதமடைந்துள்ளதாலும், இச்சாலைகள் சத்தி சாலை, ஆவராம்பாளையம், பீளமேடு மற்றும் அவினாசி சாலை இணைப்பு சாலையாதலால் வாகன போக்குவரத்திற்கு கடும் நெருக்கடியாக உள்ளது.

எனவே, இச்சாலை உடனடியாக புதுப்பித்தல் அவசியமாகிறது. மேற்படி ஆவராம்பாளையம் சாலையில் சின்னசாமி சாலை முதல் சங்கனுர் பள்ளம் வரை மற்றும் பாலாஜி நகர் பிரதான சாலையில் தார்தளம் புதுப்பித்தல் பணிக்கு மதிப்பீடு ரூ. 64,00,000 க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 13158/2012/எம்.டி. 4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 337 நாள் 31.01.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 20

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்புப் பிரிவு - இரயில்வே திட்டப்பணிகள் - இரயில்வே கடவுகள் உள்ள மாநகராட்சி சாலைகளில் மேம்பாலம் கட்டும் பணி மேற்கொள்ள நெடுஞ்சாலைத்துறைக்கு மாநகராட்சி சாலைகளை தற்காலிகமாக ஒப்படைப்பு செய்வது – தொடர்பாக |

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் இரயில்வே கடவுகள் உள்ள சாலைகள் மேம்பாலம் அமைக்கும் பணிக்காக மாநகராட்சிக்கு சொந்தமான 7 சாலைகளை மாமன்ற தீர்மானம் எண். 183 நாள் 29.12.2011 னை தொடர்ந்து அரசின் பின்னேற்பு எதிர்பார்த்து பணி துவங்க அரசால் தெரிவிக்கப்படும் நிபந்தனைக்குட்பட்டு தற்காலிகமாக நெடுஞ்சாலைத்துறைக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

தற்போது கோட்ட பொறியாளர் (நெ), நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அவர்களின் க.எண் 1/2011-12/ வ.அ, நாள் 23.12.2012ம் தேதிய கடிதத்தில் இரயில்வே கடவு எண் 2, 5, 6 மற்றும் 8 ஆகிய கடவுகள் செல்லும் மாநகராட்சிக்கு சொந்தமான சாலைகள் தற்காலிகமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், அதில் பீளமேடு விளாங்குறிச்சி சாலை கடவு எண் 8 என குறிப்பிட்டுள்ளதாகவும், இச்சாலையில் கடவு எண் 7 க்கு மாற்றாக மேம்பாலம் கட்ட நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளதால் கடவு எண் 8 என்பதற்கு மாற்றாக கடவு எண் 7 (பீளமேடு விளாங்குறிச்சி சாலை) என திருத்தம் செய்து நெடுஞ்சாலைத்துறைக்கு தற்காலிகமாக ஒப்படைப்பு செய்ய வேண்டுமாறும், மேலும் 2010-11 இரயில்வே திட்ட பணியின் கீழ் கடவு எண் 4 ஒண்டிப்புதூர் - S.I.H.S. காலனி சாலையில் இரயில்வே கடவுக்கு மாற்றாக சாலை மேம்பாலம் கட்ட நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளதால் இச்சாலையினையும் நெடுஞ்சாலைத்துறைக்கு தற்காலிகமாக ஒப்படைப்பு செய்ய வேண்டுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, கோட்ட பொறியாளர் (நெ),நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, ஏற்கனவே மாமன்ற தீர்மானத்தில் கடவு எண் 8 பீளமேடு விளாங்குறிச்சி சாலை என்பதை திருத்தம் செய்து கடவு எண் 7 பீளமேடு விளாங்குறிச்சி சாலை என திருத்தம் செய்யவும், மேலும் 2010-11 இரயில்வே திட்ட பணிகளின் கீழ் கடவு எண் 4 ஒண்டிப்புதூர் S.I.H.S. காலனி சாலையில் இரயில்வே கடவுக்கு மாற்றாக சாலை மேம்பாலம் கட்டவும் அரசு விதிக்கும் நிபந்தனைக்குட்பட்டு அவசர அவசியத்தை முன்னிட்டு நெடுஞ்சாலைத் துறைக்கு மாநகராட்சி சாலைகளில் பணி மேற்கொள்ள தற்காலிகமாக ஒப்படைப்பு செய்யவும், பணி முடிவடைந்த பின்னர் உடன் திரும்ப ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் முன்அனுமதி வழங்க மாமன்றத்தின் முடிவுற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 41101/2007/MH5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 338 நாள் 31.01.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 21

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண்.57, காமராஜர் சாலை, மசக்காளிபாளையம் சாலை இணைப்பு திட்டச்சாலை 40 அடி அகலம் - உத்தேசம் உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு அனுப்பி வைத்தல் - தொடர்பாக.

பார்வை- மாமன்ற உறுப்பினர் திரு.மாரப்பன் வார்டு எண்.57 அவர்களின் வேண்டுகோள்.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண்.57 மாமன்ற உறுப்பினர் திரு.ஆர்.மாரப்பன் காமராஜர் சாலையினையும், மசக்காளிபாளையம் சாலையினையும் இணைக்கும் வகையில் 40 அடி அகல திட்டச்சாலை தனியாரிடமிருந்து நில ஆர்ஜிதம் செய்து அமைத்து தரும்படி கோரி வருகின்றார். இதற்கு காரணமாக காமராஜர் சாலையும், மசக்காளிபாளையம் சாலையினையும் இணைக்கும் வகையில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வகையில் உரிய அகலத்துடன் சாலை அமைப்பு இல்லாததை காரணமாக தெரிவித்துள்ளார். இப்பகுதி சிங்காநல்லூர் இஎஸ்.ஐ மருத்துவமனையின் வடபுறமும், கீதா கல்லூரிக்கு முன்புறமும் அமைகிறது. இப்பகுதி சிங்காநல்லூர் கிராமம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.8 பகுதியில் சிசி என பெயரிடப்பட்டு 40 அடி அகல சாலையாக வரையறை செய்யப்பட்டுள்ளது. விரிவு அபிவிருத்தி திட்டத்தில் கண்டுள்ள விபரங்களின்படி உத்தேச சாலை அமைப்பு செய்ய கீழ்கண்ட கணக்கீடு சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>காமராஜர் சாலை, மசக்காளிபாளையம் சாலை இணைப்பு</u> (கீதா காலேஜ் பகுதி)

| | | |
|---|---|---|
| சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண் | . | 8 சிசி 40 அடி அகல திட்டச்சாலை |
| உத்தேச திட்டச்சாலை நீளம் | - | 550 மீட்டர் |
| நில ஆர்ஜிதம் செய்யப்படவேண்டிய பரப்பளவு | - | 1.67 ஏக்கர் |
| சராசரி வழிகாட்டி மதிப்பு | - | ரூ.90லட்சம்/- ஏக்கர் ஒன்றிற்கு (01.04.2012 மதிப்பு) |
| நில ஆர்ஜிதம் செய்ய வேண்டிய நிலத்தின் வழிகாட்டி மதிப்பு | - | 1,45,00,000/- |
| சாலை அமைப்பிற்குண்டான தோராய மதிப்பீடு | - | 55,00,000/- |
| மொத்தம் | - | ரூ.2,00,00,000 |

காமராஜர் சாலை மற்றும் மசக்காளிபாளையம் சாலை இணைக்கும் வகையில் சிங்காநல்லூர் பகுதியில் பெருத்த போக்குவரத்து இடையூறு ஏற்படுகிறது. இதனை களையும் வகையில் 550 மீட்டர் நீளத்திற்கு தனியார் நிலத்தில் திட்டச்சாலை அமைத்தால் மாநகரின் போக்குவரத்து இடையூறை தவிர்க்கலாம். இது அத்தியாவசிய, மிக முக்கிய திட்டச்சாலை ஆகும். இதன் மூலம் பள்ளிச் சிறுவர்கள், கல்லூரி மாணவர்கள், பணியாளர்கள் மற்றும் ஈ.எஸ்.ஐ மருத்துவ பல்கலைக்கழகம் மற்றும் மருத்துவமனைக்கு வந்து செல்லும் ஆகியோர் பயன்பெற வழிவகை உள்ளது.

உத்தேச திட்டச்சாலை நில பரப்பளவு தனியார் நிலம், மற்றும் சிறுபகுதி மனைப்பிரிவின் 30 அடி அகல சாலை உள்ளடக்கமாக அமைகிறது. தற்சமயம் எவ்வித சாலை அமைப்பும் இதில் இல்லை. புதியதாக தனியாரிடமிருந்து நில ஆர்ஜிதம் செய்து சாலை அமைப்பு செய்ய வேண்டியுள்ளது. மேற்காண் பணியினை மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று உள்ளூர் திட்டக் குழுமத்தின் உள் கட்டமைப்பு மேம்பாட்டு நிதியிலிருந்து பெற்று அபிவிருத்தி செய்ய மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- ஒப்புதல் செய்யலாம். ந.க.எண்.719/2013/ எம்.எச்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 339 நாள் 31.01.2013</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 22

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் 1 துடியலூர் பகுதியில் உள்ள இரயில் நிலையத்தில் இரயிலை நிறுத்தி எடுத்துச் செல்ல தேவையான அடிப்படை வசதிகளை செய்து தருதல் - தென்னக இரயில்வே அலுவலகத்தில் இருந்து வந்த கடிதத்தின் மீது மேல் நடவடிக்கை எடுத்தல் - மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்பித்தல்

பார்வை :
1. தென்னக இரயில்வே கடிதம் எண்.சிசி.13/Opening/halt/2010, நாள் 07.08.2010
2. துடியலூர் பேரூராட்சி மன்ற தீர்மானம் எண் 73/10, நாள் 18.08.2010
3. தென்னக இரயில்வே Divisional Commercial Manager அவர்களின் கடிதம் எண் SA/C 210/Thudiyalur/12 நாள் 10.10.2012 மற்றும் 03.01.13

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 1 துடியலூர் பகுதியில் உள்ள இரயில் நிலையத்தில் இரயிலை நிறுத்தி எடுத்து செல்ல ஷ்ரம்தான் (Shramdhan) திட்டத்தின் கீழ் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, கழிவறை, 100சதுரஅடி (10'x10') அளவுள்ள ஸ்டேசன் மாஸ்டர் அறை மற்றும் இரயில் நின்று செல்லும் பிளாட்பார்ம் சமன்படுத்துதல் ஆகிய பணிகளை உள்ளாட்சி மூலம் செய்து தரக் கோரி தென்னக இரயில்வே துறையிலிருந்து துடியலூர் பேரூராட்சிக்கு 07.08.2010 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த பணிகளை செய்து தருவதாக துடியலூர் பேரூராட்சி மன்றத்தில் பொருள் வைக்கப்பட்டு தீர்மானம் எண்: 73/10 நாள் 18.08.2010 மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது தொடர்பான உறுதிகடிதம் கேட்டு மீண்டும் தென்னக இரயில்வே துறையிலிருந்து கடிதம் 10.10.2012 அன்று பெறப்பட்டுள்ளது.

மேற்படி அடிப்படை வசதிகளை செய்து தருவது தொடர்பாக மாமன்றத்தின் முடிவுக்கு பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.எண். 00759/2012/அ12

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 340 நாள் 31.01.2013</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 23

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண்.57, நிலையில் உள்ள மசக்காளிபாளையம் சாலை விஸ்தரிப்பு - விரிவு அபிவிருத்தி திட்டத்தில் மறுவரையறை செய்தல் - உத்தேசம் உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு அனுப்பி வைத்தல்

பார்வை- வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் ஆலோசனை கூட்ட உத்திரவு நாள்.22.01.2013.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண்.57, நிலையில் உள்ள மசக்காளிபாளையம் சாலை அவினாசி சாலையினையும், திருச்சி சாலையினையும் இணைக்கும் பிரதான இணைப்புச் சாலை ஆகும். வடபகுதியில் ஜி.ஆர்.ஜி பள்ளி சந்திப்பில் துவங்கி தெற்கு நோக்கி ராஜலட்சுமி நகர், குச்சி லே அவுட், மசக்காளிபாளையம், மகாலட்சுமி நகர், காந்தி நகர், உப்பிலிபாளையம் வழியாக பெர்க்ஸ் பள்ளியினை கடந்து திருச்சி சாலையில் சிங்காநல்லூர் குளக்கரை சந்திப்பினை அடைகிறது.

நிலையில் உள்ள மசக்காளிபாளையம் சாலை சம அளவிலான அகலத்தில் இல்லாமல் கீழ்கண்டவாறு உள்ளது.

| | | |
|---|---|---|
| 1) | ஜி.ஆர்.ஜி பள்ளி முதல் தெற்கு நோக்கி கல்யாணசுந்தரம் வீதி வரை | சாலையின் அகலம் 60 அடி உள்ளது. |
| 2) | கல்யாணசுந்தரம் வீதி முதல் பாலன் நகர் தெற்கு பகுதி வரை | சாலையின் அகலம் 110 அடி உள்ளது. |
| 3) | பாலன் நகர் தெற்கு பகுதி முதல் எஸ் பென்ட் வரை | நிலையில் சாலை அகலம் 30 அடி மட்டுமே உள்ளது. |
| 4) | சின்னசாமி நகர் முதல் வ.உ.சி நகர் வரை | சுமார் 40 அடி அகல சாலை நிலையில் உள்ளது. |
| 5) | வ.உ.சி நகர் முதல் வளைவு அமைப்புகளுடன் மசக்காளிபாளையம் பழைய கட்டுமான பகுதி வரை. | சுமார் 40 அடி அகல சாலை நிலையில் உள்ளது. |
| 6) | மசக்காளிபாளையம் பழைய கட்டுமான பகுதி முதல் தெற்கு நோக்கி மாநகராட்சி பள்ளி வரை | சுமார் 60 அடி அகல சாலை நிலையில் உள்ளது. |
| 7) | மசக்காளிபாளையம் மாநகராட்சி பள்ளி முதல் தெற்கு நோக்கி காந்தி நகர் வரை | சுமார் 30 அடி அகல சாலை நிலையில் உள்ளது. |
| 8) | காந்தி நகர் பகுதி முதல் தெற்கு நோக்கி பத்திரகாளியம்மன் கோவில் வரை | நிலையில் 30 அடிக்கு குறைவான அகலத்தில் சாலை உள்ளது. |
| 9) | பத்திரகாளியம்மன் கோவில் முதல் தெற்கு நோக்கி பெர்க்ஸ் பள்ளி வரை. | சுமாார் 40 அடி அகல சாலை நிலையில் உள்ளது. |
| 10) | பெர்க்ஸ் பள்ளி முதல் தெற்கு நோக்கி திருச்சி சாலை சந்திப்பு பகுதி | நிலையில் சுமார் 40 அடி அகலம் சாலை உள்ளது. |

மேற்காண் வகையில் அமைந்துள்ள மசக்காளிபாளையம் சாலை கோயம்புத்தூர் மாநகரின் பெரும்பாலான வாகனங்கள் கடந்து செல்லும் பிரதான பாதையாக அமைவதால் நிலையில் உள்ள சாலை விஸ்தரிப்பு செய்ய வேண்டியுள்ளது. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமத்தால் விரிவு அபிவிருத்தி திட்டத்தில் நில ஆர்ஜிதம் செய்து விஸ்தரிப்பு அபிவிருத்தி செய்யும் வகையில் திட்டசாலை வரையறை செய்யப்படவில்லை. நிகழ்கால போக்குவரத்து நெருக்கடியினையும் அதனால் பொதுமக்கள் அனு தினமும் சந்திக்கும் இடையூறுகளையும் களையும் வகையில் மசக்காளிபாளையம் சாலையினை சராசரியாக 60 அடி அகலத்தில் திட்டச்சாலை விஸ்தரிப்பு வரையறை செய்து அபிவிருத்தி செய்தால் பொதுமக்களின் அன்றாட பாதுகாப்பான போக்குவரத்திற்கும் உதவிகரமாக இருக்கும். எனவே, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் உத்திரவின்படி மேற்காண் திட்டச்சாலை விஸ்தரிப்பு உத்தேசத்தை விரிவு அபிவிருத்தி திட்டத்தில் இணைப்பதுடன் அபிவிருத்தி செய்வதற்கு தேவையான நில ஆர்ஜித தொகை மற்றும் சாலை அமைப்பு தொகையினை உள்ளூர் திட்டக் குழுமம் மாநகர் உள் கட்டமைப்பு அபிவிருத்தி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து அபிவிருத்தி செய்வது தொடர்பாக மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கலாம்.

அலுவலகக் குறிப்பு- ஒப்புதல் செய்யலாம். ந.க.எண்.720/2013/எம்.எச்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 341 நாள் 31.01.2013</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 24

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - மேட்டுப்பாளையம் சாலை - சத்தியமங்கலம் சாலை இணைப்பு திட்ட சாலை பிரேரணை சமர்ப்பித்தல் - தொடர்பாக

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மேட்டுப்பாளையம் சாலை மற்றும் சத்தியமங்கலம் சாலை இணைப்பு சாலை முக்கியமான சாலையாக அமைகிறது. மேட்டுப்பாளையம் சாலையிலிருந்து நல்லாம்பாளையம் சாலை, சங்கரலிங்கனார் சாலை, பாரதியார் சாலை மற்றும் ரபீந்தரநாத்தாகூர் சாலை வழியாக கணபதி பகுதியில் சத்தியமங்கலம் சாலையுடன் இணைகிறது. இந்த இணைப்பு திட்டசாலையால் நல்லாம்பாளையம், கவுண்டம்பாளையம், மணியகாரம்பாளையம் மற்றும் கணபதி பகுதியில் வசிக்கும் சுமார் 2 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.

இத்திட்டசாலை சங்கனூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 7, 8, 9, 10,11 ன்படி மேட்டுப்பாளையம் சந்திப்பு முதல் நல்லாம்பாளையம் மயானம் வரை 80’0’’ அகல ‘AA’ திட்ட சாலையாகவும், கணபதி விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 1ன்படி நல்லாம்பாளையம் மயானம் முதல் மணியகாரம்பாளையம் வழியாக சங்கரலிங்கனார் சாலை மற்றும் பாரதியார் சாலை வரை 50’0’’ அகல ‘B1B1’ மற்றும் ‘BB’ திட்டசாலையாகவும் கணபதி விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 2ன்படி ரபீந்தரநாத் தாகூர் சாலை திட்ட சாலையாகவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்சாலையினை சங்கனூர் கிராமம் க.ச.எண்கள் 460/3B/2B/1A2, 460/3B/2B/B1, 461/1A2, 461/1B2, 461/2B, 462/1B, 463/3, 465/B/1B, 467/1A, 467/2, 467/3, 467/4, 437/1, 469/2B, 470/1C, 472, 473, 474, 475, 476, 539/3, 541/2, 541/3, 522, 468/1A, 516/1, 516/2, 511/2, 509/1, 509/2, 508/5, 508/6, 494/3, 494/2, 494/1 எண்களிலும் கணபதி கிராமம் க.ச.எண்கள் 548, 547, 546/1, 531/ 529/1, 529/2, 550, 595/2, 585, 489/1, 488 & 487 எண்களிலும் அகலப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்சாலையின் நீளம் 5200 மீ உள்ளது. இச்சாலை தற்போது நல்லாம்பாளையம் சாலை பகுதியில் 30’0’’, 60’0’’ மற்றும் 50’0’’ சாலையாகவும் பாரதியார் சாலையில் 50’0’’ மற்றும் 30’0’’ அடி சாலையாகவும் ரபீந்தரநாத் தாகூர் சாலையில் 50’0’’ , 40’0’’ மற்றும் 30’ 0’’ அகல சாலையாகவும வேறுபட்ட அளவுகளில் நிலையில் உள்ளது. பல்வேறு இடங்களில் இச்சாலையினை அகலப்படுத்த வேண்டியுள்ளது.

மேற்கண்ட சாலையினை அகலப்படுத்துவதற்கு தனியாரிடமிருந்து நில ஆர்ஜிதம் செய்து உரிய இழப்பீட்டு தொகையை வழங்கிய பின்னர் உள்ளூர் திட்டக்குழுமத்தால் சாலை அகலப்படுத்தப்பட்டு மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய வேண்டும்.

<u>உத்தேச திட்டசாலை விபரம்</u>

| | | |
|---|---|---|
| உத்தேச திட்டச் சாலை நீளம் | - | 5200 மீ அல்லது 17056 அடி |
| நில ஆர்ஜிதம் செய்ய வேண்டிய பரப்பளவு | - | 1,84,900 சதுர அடி (அல்லது)<br>4.24 ஏக்கர் (அல்லது)<br>17184 சதுர மீட்டர் |
| சராசரி வழிகாட்டு மதிப்பு | - | ரூ.1000/- சதுரஅடி<br>(சங்கனூர் கிராமம்) |
| | - | ரூ.252 சதுர அடி<br>(கணபதி கிராமம்) |
| தோராய நில மதிப்பு | - | ரூ.16,65,63,000/- |
| சாலை அமைப்பதற்கு உண்டான தொகை | - | ரூ.3,00,00,000/- |

இத்திட்டச் சாலையினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் போக்குவரத்து நெரிசல் இல்லாமல் பல இலட்சம் பொதுமக்களுக்கு பயனளிக்கும் வகையில் அமையும். எனவே மேற்படி சாலை விரிவாக்கத்திற்கு தேவைப்படும் நிலத்தினை ஆர்ஜிதம் செய்யவும், அதற்கான செலவு தொகை சுமார் 20.00 கோடிக்கு உள்ளூர் திட்டக்குழுமம் நிதியிலிருந்து அல்லது உள்கட்டமைப்பு நிதியிலிருந்து பெற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

திட்டசாலையினை விரிவு அபிவிருத்தி திட்டத்தின்படி அகலப்படுத்தி அமைக்க நிதியுதவி உள்ளூர் திட்டக்குழுமம் அல்லது உள்கட்டமைப்பு நிதியிலிருந்து பெற்று சாலை அமைக்க தீர்மானிக்கலாம்.

ந.க.எண் 766/2013/எம்.எச்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 342 நாள் 31.01.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண். 25

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி வணிக வளாக கடைகள் -ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யவும் மற்றும் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டுதல் – தொடர்பாக

பார்வை :
1) அரசாணை எண். 147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.
2) அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.
3) வ.வி.ம.நி.குழு தீர்மான எண்.129நாள்.22.10.2012.

*********

பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீட்டித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92–நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07–ன் படி புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணையின் படி பொதுப்பணித்துறை வாடகை மதிப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் வரி வதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.129 நாள்.22.10.12-ன் படி

1. அரசாணை எண்.92 ந.நி.ம.கு.வ துறை நாள்.03.7.2007-ல் தெரிவித்து உள்ளவாறு ஒதுக்கீடு பெற்று 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு வெளிசந்தை மதிப்பில் வாடகை உயர்வு செய்யவும், 9 ஆண்டுகள் முடிவடையாத கடைகளுக்கு 15% வாடகை உயர்வு செய்யவும் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

2. கடைகள் பற்றிய முழு விவரங்களுடன் மாமன்றத்திற்கு பொருள் வைத்து ஒப்புதல் பெற தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் மத்திய மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி வணிக வளாக கடைகளில் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி தற்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் பொதுபணித்துறையின் வாடகை மதிப்பீட்டு கணக்கீட்டின்படி வாடகையினை உயர்வு செய்யவும் மூன்றாண்டுகள் முடிவுற்ற கடைகளுக்கு 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யவும் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

1. வார்டு எண் 83 உப்புகிணறு சந்து மாநகராட்சி வணிக வளாக கடைகள் -3
2. வார்டு எண் 73 திருச்சி ரோடு மாநகராட்சி வணிக வளாக கடைகள் -1
3. வார்டு எண் 80 மரக்கார நஞ்சப்பா வீதி மாநகராட்சி வணிக வளாக கடைகள் -2
4. வார்டு எண் 81 V.H. ரோடு மாநகராட்சி வணிக வளாக கடைகள் -1
5. வார்டு எண் 72 ஆடிஸ் வீதி மாநகராட்சி வணிக வளாக கடைகள் -3
6. வார்டு எண் 84 உக்கடம் சலவைத்துறை – 61

உயர்வு செய்யப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்யவும் மற்றும் வித்தியாச நிலுவை வாடகையினை வசூல் செய்யவும், இத்துடன் சேவை வரி 12.36% யினை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் உரிமம் புதுப்பித்து ஒப்படைக்கவும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மறுஏலத்திற்கு கொண்டு வரவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.10119 /2012 / அ1 (ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 343 நாள் 31.01.2013</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது. மேலும் பொருளின் இணைப்பு பக்கம் எண் 6 வார்டு எண் 84 மாநகராட்சி சலவைத்துறை வ.எண் 1 முதல் 32 வரையுள்ள கடைகளுக்கு மாத வாடகை ரூ. 250.00க்கு பதிலாக ரூ. 200.00 என்று நிர்ணயித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 26

பொருள் :- பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சிப் பகுதிகளில் அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில்கள் மற்றும் வியாபாரங்கள் போன்ற 58 இனங்கள் உரிமையாணைக் கட்டணங்கள் நிா்ணயம் செய்து பட்டியலில் புதிதாக சோ்ப்பது – சுகாதார நிலைக்குழு மற்றும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரையின் பேரில் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக.

----------

கோயம்புத்தூா் மாநகராட்சிப் பகுதிகளில் நடத்தப்பட்டு வரும் அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில்கள் மற்றும் வியாபாரங்களுக்கு கோயம்புத்தூா் மாநகா் மன்றத்தின் 27.03.2000-ம் தேதிய 325-ம் எண் தீா்மானத்தின்படி 01.04.2000-ம் தேதி முதல் 166 இனங்களுக்கு உரிமையாணைக் கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு வருகிறது. இதில் வ.எண். 3-ல் சாராயம் உற்பத்தி செய்தல் (Arrack) நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதில் மேலும், 58 தொழில்கள் மற்றும் வியாபாரங்களுக்கு கட்டணம் நிா்ணயம் செய்து புதிதாக சோ்க்கப்பட வேண்டியுள்ளது. எனவே, ஏற்கனவே உள்ள 166 இனங்களுக்குண்டான பட்டியலில், புதிதாக 58 இனங்களை சோ்த்து உரிமையாணை கட்டணங்களை கோயம்புத்தூா் மாநகராட்சி பகுதிகளில் நடைமுறைப்படுத்த சுகாதாரக் குழுவின் தீா்மான எண். 12/ 2012-13 நாள். 30.05.2012ல் ஒப்புதல் அளித்ததின் பேரிலும் மற்றும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மான எண் 61/ 2012-13, நாள். 13.08.2012ன் பரிந்துரையின் பேரிலும் புதிதாக சோ்க்கப்பட வேண்டிய உரிமையாணைக் கட்டணங்களை 01.04.2013 முதல் நிா்ணயம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண்.11955/2010/ எம்.இ.8

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 344 நாள் 31.01.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மானம் எண் 61 நாள் 13.8.12ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீா்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 27

**பொருள்:** பணியமைப்பு – கோவை மாநகராட்சி – திரு. எம். தனபாலன், துப்புரவு ஆய்வாளா், பொள்ளாச்சி நகராட்சி – கோயம்புத்தூா் மாநகராட்சிக்கு ஒரு வழி பணி மாறுதல் கோருவது – தொடா்பாக.––––––

பொள்ளாச்சி நகராட்சியில் துப்புரவு ஆய்வாளராக பணிபுரியும் திரு. எம். தனபாலன் அவா்கள் தன்னுடைய வயதான பெற்றோரை உடனிருந்து கவனிக்க வேண்டியுள்ளதாகவும், தனக்கு கோயம்புத்தூா் மாநகராட்சிக்கு ஒரு வழி பணிமாறுதல் வழங்குமாறும் கேட்டுள்ளாா்.

மேலும் பொள்ளாச்சி நகரமன்ற தீா்மான எண். 810 நாள் 28.12.2012ல் மேற்படியாரை ஒரு வழி மாறுதலில் கோயம்புத்தூா் மாநகராட்சிக்கு துப்புரவு ஆய்வாளராக பணியிட மாற்றம் செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டு பொள்ளாச்சி நகராட்சி ஆணையா் அவா்களின் கடித ந.க.எண்.எச்.1/9211/2012 நாள் 03.01.2013ன் மூலமாக நகராட்சி நிா்வாக ஆணையா் அவா்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இம்மாநகராட்சியில் தற்போது 2 துப்புரவு ஆய்வாளா் பணியிடங்கள் காலியாக உள்ளது. மேற்கண்ட இடத்திற்கு திரு. எம். தனபாலன், துப்புரவு ஆய்வாளா், பொள்ளாச்சி நகராட்சி அவா்களை ஒரு வழி மாறுதல் மூலம் கோயம்புத்தூா் மாநகராட்சியில் சோ்த்துக் கொள்ள நகராட்சி நிா்வாக ஆணையா் அவா்களுக்கு பரிந்துரைத்து செயற்குறிப்பு அனுப்ப மாமன்ற அனுமதிக்காக பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : அனுமதிக்கலாம். (ந.க.எண். 633/2013/எம்சி3)

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 345 நாள் 31.01.2013</u>**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீா்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 28

பொருள் : வார்டு எண் 47 இராயப்பா நகர் மாநகராட்சி கட்டிடத்தில் இயங்கி வரும் நூலகத்திற்கு வெளிச்சந்தை மதிப்பில் வாடகை நிர்ணயம் செய்தல் - தொடர்பாக

பார்வை : 1.அரசாணை எண் 92 ந.நி.ம.கு.வ.து நாள் 03.07.2007
2.வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 176 நாள் 28.01.2013

*********

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 47 இராயப்பா நகர் மாநகராட்சி கட்டிடத்தில் இயங்கி வரும் நூலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு 9 வருடங்கள் முடிவடைந்துவிட்டதால் அரசாணை எண் 92 ந.நி.ம.கு.வ.து நாள் 03.07.2007ல் தெரிவித்துள்ளபடி 01.04.2013 முதல் வெளிச்சந்தை மதிப்பில் வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டியுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | நூலகம் அமைந்துள்ள பகுதி | தற்போதைய மாத வாடகை | கடையின் அளவு |
|---|---|---|---|---|
| 1 | 47 | இராயப்பா நகர் | ரூ.2745/- | 882 சதுரடி |

மேற்படி நூலகத்திற்கு அரசாணையில் தெரிவித்துள்ளபடி தற்போதைய வெளிச்சந்தை மதிப்பில் வாடகை உயர்வு செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 176 நாள் 28.01.2013ல் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இப்பொருளின் மீது மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1780/2012/அ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 346 நாள் 31.01.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 176 நாள் 28.01.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 29

**பொருள்** : வார்டு எண் 47 இராயப்பா நகர் மாநகராட்சி கட்டிடத்தில் இயங்கி வரும் காவல் துறை அலுவலகத்திற்கு வாடகை உயர்வு செய்தல் - தொடர்பாக

பார்வை : 1.அரசாணை எண் 92 ந.நி.ம.கு.வ.து நாள் 03.07.2007
2.வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 177 நாள் 28.01.2013

*********

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 47 இராயப்பா நகர் மாநகராட்சி கட்டிடத்தில் இயங்கி வரும் கீழ குறிப்பிட்டுள்ள அலுவலகங்களுக்கு வாடகை உயர்வு செய்யப்பட்டு மூன்று வருடங்கள் முடிவடைந்துவிட்டதால் அரசாணை எண் 92 ந.நி.ம.கு.வ.து நாள் 03.07.2007ல் தெரிவித்துள்ளபடி 01.04.2013 முதல் முந்தைய வாடகையிலிருந்து 15% வாடகை உயர்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | உரிமம்தாரர் பெயர் | கட்டிடத்தின் அளவு | தற்போதைய மாத வாடகை | 15ரூ உயர்வு செய்யப்பட்ட வாடகை |
|---|---|---|---|---|---|
| 1 | 47 | காவல்துறை ஆய்வாளர் VP CB CID | 882 சதுரடி | ரூ.7796/- | ரூ.8965/- |
| 2 | 47 | காவல்துறை ஆய்வாளர் OCIU | 1491 சதுரடி | ரூ.11645/- | ரூ.13392/- |

மேற்படி அலுவலகங்களுக்கு அரசாணையில் தெரிவித்துள்ளபடி 15% வாடகை உயர்வு செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 177 நாள் 28.01.2013ல் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இப்பொருளின் மீது மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1780/2012/அ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 347 நாள் 31.01.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 177 நாள் 28.01.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 30

**பொருள்** : வார்டு எண் 26 மற்றும் 43ல் இயங்கி வரும் நியாய விலை கடைகளுக்கு வெளிச்சந்தை மதிப்பில் வாடகை நிர்ணயம் செய்தல் - தொடர்பாக

பார்வை : 1. அரசாணை எண் 92 ந.நி.ம.கு.வ.து நாள் 03.07.2007
2.வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 175 நாள் 28.01.2013

*********

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 26 மற்றும் 43ல் கோயம்புத்தூர் வேளான்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம் இயங்கி வரும் நியாய விலை கடைகளுக்கு கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு 9 வருடங்கள் முடிவடைந்துவிட்டதால் அரசாணை எண் 92 ந.நி.ம.கு.வ.து நாள் 03.07.2007ல் தெரிவித்துள்ளபடி 01.04.2013 முதல் வெளிச்சந்தை மதிப்பில் வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டியுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | நியாய விலைக்கடை அமைந்துள்ள பகுதி | தற்போதைய மாத வாடகை | கடையின் அளவு |
|---|---|---|---|---|
| 1 | 26 | அம்மாசை கவுண்டர் வீதி | ரூ.300/- | 480 சதுரடி |
| 2 | 43 | உருமாண்டாம் பாளையம் | ரூ.300/- | 480 சதுரடி |

மேற்படி கடைகளுக்கு அரசாணையில் தெரிவித்துள்ளபடி தற்போதைய வெளிச்சந்தை மதிப்பில் வாடகை உயர்வு செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 175 நாள் 28.01.2013ல் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இப்பொருளின் மீது மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1780/2012/அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 348 நாள் 31.01.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 175 நாள் 28.01.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 31

| | |
|---|---|
| பொருள் : | கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - வரவினங்களில் வசூலிக்கப்பட்டுள்ள தொகைகளுக்கு மத்திய கலால் துறைக்கு செலுத்தப்பட வேண்டிய சேவை வரியினை செலுத்த அனுமதி வேண்டுவது – தொடர்பாக |
| பார்வை : | 1. ஆணையாளர் மத்திய கலால் துறை அவர்களின் விளக்கம் அளிக்க கோரிய அறிக்கை நாள் 17.10.2012<br>2. ஆணையாளர் நகராட்சி நிர்வாகம் அவர்களது கடிதம் ந.க.எண். 9291/2009/ஆர்.2 நாள் 14.11.2012<br>3. சேவைவரி தனியார் ஆலோசகர் அவர்களின் கருத்துரு நாள் 22.01.13<br>4. வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 189 நாள் 28.01.2013 |

*********

பார்வை 1-ல் காணும் கடிதத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ கண்டுள்ள வரவினங்களில் வரியில்லா இனங்கள் மற்றும் இதர இனங்களில் 2007-08-ம் ஆண்டு முதல் வசூல் செய்யப்பட்டுள்ள தொகைகளுக்கு சேவை வரி செலுத்துமாறும், மேலும் நாளது வரையில் சேவை வரி செலுத்தப்படாததற்கான விளக்கத்தை அளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | கணக்கு எண் | இனம் |
|---|---|---|
| 1 | 1025 | விளம்பர கட்டணம் |
| 2 | 1085 | பாதாள சாக்கடை சுத்தம் செய்யும் கட்டணம் |
| 3 | 1044 (C) | குப்பை அகற்றுதல் |
| 4 | 1022 | மார்கெட் கட்டணம் |

| | | |
|---|---|---|
| 5 | 1026 | பேருந்து நிலைய கட்டணம் |
| 6 | 1027 | ஆடு அறுவைமனை கட்டணம் |
| 7 | 1028 | வாகன நிறுத்த கட்டணம் |
| 8 | 1033 | குத்தகைக்கு விடப்படும் காலியிடங்களின் கட்டணம் |
| 9 | 1036 | வணிக வளாக கட்டணம் |
| 10 | 1037 | சமுதாய கூடக்கட்டணம் |
| 11 | 1038 | கட்டிட வாடகை |
| 12 | 1039 | கட்டண கழிப்பிடம் |
| 13 | 1040 | பயணிகள் தங்கும் அறை |
| 14 | 1042 | பூங்காக்கள் கட்டணம் |
| 15 | 1066 | இதர பிடித்தங்கள் |
| 16 | 1079 | சாலையோர விளம்பர கட்டணம் |
| 17 | 1100 | கேபிள் பதிப்பு கட்டணம் |
| 18 | 1043 | கட்டிட இடிபாடுகள் கட்டணம் |
| 19 | 1044 | இதர கட்டணம் |

அ. மேற்குறிப்பிட்டுள்ள 19 இனங்களில் கீழ் குறிப்பிட்டுள்ள வரவினங்களில் 2007 -2008 முதல் 2011-12 வரையில் தொகை ஏதும் வசூலிக்கப்படவில்லை.

| வ.எண் | கணக்கு எண் | இனம் |
|---|---|---|
| 1 | 1026 | பேருந்து நிலைய கட்டணம் |
| 2 | 1027 | ஆடு அறுவைமனை கட்டணம் |
| 3 | 1028 | வாகன நிறுத்த கட்டணம் |
| 4 | 1036 | வணிக வளாக கட்டணம் |
| 5 | 1038 | கட்டிட வாடகை |
| 6 | 1040 | பயணிகள் தங்கும் அறை |
| 7 | 1079 | சாலையோர விளம்பர கட்டணம் |

ஆ. சேவை வரி செலுத்த தேவையில்லாத இனங்கள் -

(1) 1066 - இதர பிடித்தங்கள் (இவ்வினத்தில் பணியாளர்களுக்கு கூடுதலாக வழங்கப்பட்டுள்ள ஊதியம் திரும்ப செலுத்தப்பட்டுள்ளது.)

(2) 1044 - இதர கட்டணம் (சான்றிதழ் மற்றும் சொத்துவரி புத்தக நகல் போன்ற கட்டணங்கள் வசூல் செய்யப்பட்டுள்ளன.)

இ. சேவை வரி செலுத்தப்பட்டுள்ள இனம் -

(1) 1037 - சமுதாய கூடக் கட்டணம்

ஈ. சேவை வரி செலுத்தப்பட வேண்டிய இனங்கள் -

| வ.எண் | கணக்கு எண் | இனம் | 2007-08 முதல் 2011-12 வரை வசூலிக்கப்பட்டுள்ள தொகை |
|---|---|---|---|
| 1 | 1085 | பாதாள சாக்கடை சுத்தம் செய்யும் கட்டணம் | 117632 |
| 2 | 1022 | மார்கெட் கட்டணம் | 3160600 |
| 3 | 1033 | குத்தகைக்கு விடப்படும் காலியிடங்களின் கட்டணம் | 10000 |
| 4 | 1025 | விளம்பர கட்டணம் | 37750 |
| 5 | 1036 | வணிக வளாக கட்டணம் | 140285 |
| 6 | 1039 | கட்டண கழிப்பிடம் | 131674 |
| 7 | 1043 | கட்டிட இடிபாடுகள் கட்டணம் | 7075748 |
| 8 | 1042 | பூங்காக்கள் கட்டணம் | 11955 |
| 9 | 1045-7 | குப்பை அகற்றுதல் கட்டணம் | 4438695 |
| | | மொத்தம் | 1,51,24,339 |

உ. வரியில்லா இனங்களில் வசூலிக்கப்பட்டுள்ள தொகைகள்

| வ.எண் | வரி வசூலிக்கப்பட்ட ஆண்டு | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | 2007-08 | 2041917 |
| 2 | 2008-09 | 3435795 |
| 3 | 2009-10 | 4437336 |
| 4 | 2010-11 | 6393892 |
| 5 | 2011-12 | 4938321 |
| | மொத்தம் | 2,12,53,161 |
| 6 | அரசு கட்டிடங்கள் | (-) 2178595 |
| | நிகர தொகை | 1,90,74,566 |

1. மேற்குறிப்பிட்டுள்ளவாறு வடக்கு மண்டலத்தில் வசூலிக்கப்பட்டுள்ள தொகைகளில் சேவை வரி செலுத்துவதிலிருந்து விலக்கு பெறக்கூடிய இனங்களை கண்டறிந்து அறிக்கை அளிக்க சேவை வரி தனியார் ஆலோசகர் (Consultant) அவர்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டது.
2. சேவை வரி தனியார் ஆலோசகர் (Consultant) தனது 22.01.2012 ம் தேதிய கடிதத்தில் கீழ் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு மட்டும் சேவை வரி செலுத்தப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துள்ளார்.

    1. வணிக வளாக கட்டிடங்கள் மற்றும் மீன் மார்க்கெட் கடைகள்
    2. பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி மூலம் விளம்பரம் செய்ய அளிக்கும் உரிமம்.

எனவே சேவை வரி தனியார் ஆலோசகர் (Consultant) அவர்களின் குறிப்பின்படி வடக்கு மண்டலத்தில் வணிக வளாக கடைகள் மூலம் 2007 – 2008ம் ஆண்டு முதல் கணினி பதிவேடுகளின் படி வசூலிக்கப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கான சேவை வரியினை செலுத்தவும், மேலும் நகராட்சி நிர்வாக இயக்குனரது கடிதத்தில் தெரிவித்துள்ளபடி வணிக வளாக கடைகளின் உரிமைதாரர்களுக்கு சேவை வரி நிலுவைத் தொகைகளை செலுத்துமாறு தனித்தனி அறிவிப்பு வழங்கி இத்தொகையினை வசூல் செய்யவும் கணினியில் வசூலிக்கப்பட்ட விபரத்தினை சரிபார்த்து பின்னர் சேவை வரி செலுத்த அனுமதி வழங்குவதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டது.

வணிக வளாக கடைகள்

| வ.எண் | வரி வசூலிக்கப்பட்ட ஆண்டு | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | 2007-08 | 2041917 |
| 2 | 2008-09 | 3435795 |
| 3 | 2009-10 | 4437336 |
| 4 | 2010-11 | 6393892 |
| 5 | 2011-12 | 4938321 |
| | மொத்தம் | 2,12,53,161 |
| 6 | அரசு கட்டிடங்கள் | (-) 2178595 |
| | நிகர தொகை | 1,90,74,566 |

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 189 நாள் 28.01.2013ல் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இப்பொருளின் மீது மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1780/2012/அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 349 நாள் 31.01.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 189 நாள் 28.01.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 32

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - JnNURM - BSUP திட்டத்தின் கீழ் கட்டப்படும் குடியிருப்புகள் - சொத்துவரி - கட்டிட உரிமம் தொகை, இடிபாடு அகற்றுதல் கட்டணம், தொழிலாளர் நல நிதி தொகை - அனுமதிக்கும் கூடுதலான கட்டிடத்திற்கு அபராதம் விதித்தல் -விலக்கு கோருதல்- தொடர்பாக.

பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண்.178 நாள்.28.01.2013.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின், நகர்புற ஏழ்மை மக்களுக்கான அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு பயனாளிகள் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இக்குடியிருப்புகள் BSUP திட்டத்தின்படி 268 சதுர அடிகள் இருக்க வேண்டும். சில பயனாளிகள் 268 சதுர அடிக்கும் கூடுதலாக கட்டிடம் கட்டியுள்ளனர். கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் அனுமதிக்கும் கூடுதலாக கட்டப்படும் கட்டிடபரப்பிற்கு, கட்டிட உரிமம் தொகை, கட்டிட இடிபாடு அகற்றுதல் கட்டணம் தொழிலாளர் சேமநலநிதி வசூலிக்கப்பட்டு அதன் பின்னரே வரிவிதிப்பு செய்யப்பட்டு வருகிறது. BSUP திட்டத்தின் கீழ் கட்டப்படும் குடியிருப்புகளில் 268 சதுர அடிக்கும் கூடுதலாக உள்ள குடியிருப்புகளுக்கு பயனாளிகள் இத்தொகைகளை செலுத்த இயலாத காரணத்தினால் வரிவிதிப்பு செய்ய இயலாமல் உள்ளது. மேலும் வரிவிதிப்பு செய்ய இயலாத காரணத்தினால் குடிநீர் இணைப்பு, பாதாளசாக்கடை இணைப்பு வழங்க இயலாமலும் இத்திட்டத்தின் முழுப்பலனும் பயனாளிகளைச் சென்றடைய சாத்தியமில்லாமலும் உள்ளது. வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் நாள் 27.11.12 அன்று இக்கட்டணங்களை செலுத்துவதிலிருந்து BSUP பயனாளிகளுக்கு விலக்களித்து சொத்துவரி விதிப்பு செய்ய தெரிவிக்கப்பட்டது. எனவே BSUP திட்டத்தின் கீழ் கட்டப்படும் குடியிருப்புகளுக்கு அனுமதிக்கும் கூடுதலாக அதாவது 268 சதுர அடிக்கும் கூடுதலாக உள்ள கட்டிடப்பரப்பிற்கு செலுத்த வேண்டிய கட்டிட உரிமம் தொகை, இடிபாடு கட்டணம், தொழிலாளர் சேமநல நிதி ஆகிய கட்டணங்களை கீழ கண்டவாறு நிர்ணயம் செய்யலாம்.

1. மொத்த கட்டிடப்பரப்பு 400 சதுரஅடி வரையுள்ள BSUP குடியிருப்பு கட்டிடங்களுக்கு கட்டிட உரிமம் தொகை, கட்டிட இடிபாடு கட்டணம் தொழிலாளர் சேமநலநிதி ஆகிய கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கவும்,

2. மொத்த கட்டிடப்பரப்பு 400 சதுர அடிக்கும் கூடுதலாக உள்ள BSUP குடியிருப்பு கட்டிடங்களுக்கு பிற கட்டிடங்களுக்கு உள்ளது போல் கட்டணங்களை நிர்ணயம் செய்து வசூலிக்கவும்,வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண்.178 நாள்.28.01.2013ன்படி, மாமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டு மாமன்ற ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:அனுமதிக்கலாம் ந.க.எண் : 14787/2012/எம்.ஏ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 350 நாள் 31.01.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 178 நாள் 28.01.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 33

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – வணிகவளாக கடைகள் - 6 மாதத்திற்கு மேல் மாதாந்திர வாடகைத்தொகை செலுத்தாத கடைகளின் உரிமத்தை ரத்துசெய்து பொது மின் ஏலத்தில் வைப்பது – சிறப்பு நிபந்தனை இனத்தில் சேர்த்தல் - தொடர்பாக.

பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண்.168 நாள்.28.01.2013.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட வணிகவளாக கடைகள் மாமன்ற தீர்மானத்தின்படி மாதாந்திர வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இக்கடைகளுக்கு 3 ஆண்டுகள் முடிவுற்றவுடன் 15 சதவீதம் உயர்வு செய்தும், 9 ஆண்டுகள் முடிவுற்ற கடைகளுக்கு பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி மாதாந்திர வாடகைத்தொகை நிர்ணயம் செய்யப்பட்டும் வருகிறது. மேலும் வணிகவளாக கடைகளுக்கு 6 மாதத்திற்கு வாடகை தொகை செலுத்தாத கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மாநகராட்சி வசம் எடுத்துக்கொண்டு பொதுமின்ஏலத்திற்கு வைக்கவும், அக்கடைகளுக்கு செலுத்தியுள்ள வைப்புத்தொகைகளை மாநகராட்சி நிதியில் சேர்க்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 168 நாள் 28.01.2013ன்படி, மாமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டு மாமன்ற ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 4642 /2011/எம்.ஏ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 351 நாள் 31.01.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 168 நாள் 28.01.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 34

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் வார்டு எண்.80, காம்போதி சந்து – மாநகராட்சிக்கு சொந்தமான சலவைத்துறை – வாடகை நிர்ணயம் செய்தல் - தொடர்பாக.

பார்வை : வ.வி.ம.நி.கு. தீ. எண். 196 நாள்:28.01.2013

******

கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம் வார்டு எண்.80க்குட்பட்ட காம்போதி சந்தில் மாநகராட்சி சலவைத்துறையில்

| | |
|---|---|
| அ. சலவை செய்யும் கல் | -6 எண்ணிக்கை |
| ஆ. தண்ணீர் தொட்டி | -10 எண்ணிக்கை |
| இ. 11.9’x14’ = 164.50’ அளவுள்ள அறை | -ஒன்று மற்றும் |
| ஈ. கழிப்பிடம் | -4 எண்ணிக்கை |
| உ. குளியலறை | -2 எண்ணிக்கை ஆகியவை உள்ளன. |

மேற்படி சலவைத் துறையினை உபயோகப்படுத்த ஆண்டு ஒன்றுக்கு ரூ.25000/- என்ற மதிப்பில் நிர்ணயம் செய்து பொது ஏலம் கோர வரிவதிப்பு மற்றும் குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 28.01.13-ம் தேதிய தீர்மான எண்.196-ல் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானித்துள்ளதை மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு : மாமன்றத்தின் முடிவுக்கு ந.க.எண்.9067/2012/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 352 நாள் 31.01.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 196 நாள் 28.01.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 35

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண், 73-ல் புலியகுளம் சாலையில் உள்ள தமிழ் நாடு மின்சார வாரிய உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு 01.01.2013-ல் பொது பணித்துறை வாடகை மதிப்பீட்டின்படி மாதாந்திர வாடகை நிர்ணயம் செய்தல் - தொடர்பாக

பார்வை 1.ஆணையாளர் அவர்களின் அலுவல்சாராக் குறிப்பு எண்.11414/2012/எம்.ஏ1 நாள் 26.09.2012.
2. வ.வி.ம.நி.கு. தீ. எண். 173 நாள்:**28.01.2013**

-----

பார்வை 1-ல் காணும் ஆணையாளர் அவர்களின் உத்திரவின்படி கோயம்புத்தூர் மாநகராட்சி மத்தியமண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.,73-ல் புலியகுளம் சாலையில் உள்ள தமிழ் நாடு மின்சார வாரிய உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு 01.01.2013-ல் பொது பணித்துறை வாடகை மதிப்பீட்டின்படி மாதாந்திர வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

| வ. எண் | பெயர் | கடையின் அளவு (மீ) | மொத்த ச.அடி | தற்போதைய மாத வாடகை ரூ. | பொதுப் பணித்துறை மதிப்பீட்டின் படி நிர்ணயம் செய்யப்பட வேண்டிய வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் உதவி செயற்பொறியாளர் அலுவலகம் புலியகுளம் வார்டு எண்.73 | 45.32 | 487.82 | 11,921 | 24685/- (ரூ.50.60/சதுரடிக்கு) |

மேற்கண்ட அலுவலகத்திற்கு 01.01.2013-முதல் பொதுப் பணித்துறை மதிப்பீட்டின் படி மாதாந்திர வாடகை தொகையினை நிர்ணயம் செய்ய வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 28.01.13-ம் தேதிய தீர்மான எண்.173-ல் அலுவலக குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானித்துள்ளதை மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 10938/12/அ1(ம)

### <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 353 நாள் 31.01.2013</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 173 நாள் 28.01.2013ன் தீர்மானத்தை ஏற்று அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 36

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.82 - ஈஸ்வரன் கோவில் வீதியிலுள்ள நடைபாதை கடைகள் - ஒதுக்கீடு செய்யப்பட்டு வாடகையை உயர்வு செய்து – உரிமம் புதுப்பித்தல் - தொடர்பாக

பார்வை :
1. அரசாணை எண். 147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.
2. அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.
3. வ.வி.ம.நி.குழு தீர்மான எண்.129நாள்.22.10.2012.
4. வ.வி.ம.நி.குழு தீர்மான எண்.174நாள்.28.01.2013.

*********

பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீட்டித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92–நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07–ன் படி புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணையின்படி பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் வரி வதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.129 நாள்.22.10.12-ன் படி

1. அரசாணை எண்.92 ந.நி.ம.கு.வ துறை நாள்.03.7.2007-ல் தெரிவித்து உள்ளவாறு ஒதுக்கீடு பெற்று 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு வெளிசந்தை மதிப்பில் வாடகை உயர்வு செய்யவும், 9 ஆண்டுகள் முடிவடையாத கடைகளுக்கு 15% வாடகை உயர்வு செய்யவும் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

2. கடைகள் பற்றிய முழு விவரங்களுடன் மாமன்றத்திற்கு பொருள் வைத்து ஒப்புதல் பெற தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.82 ஈஸ்வரன் கோவில் வீதியிலுள்ள பொதுப் பணித்துறை காம்பவுண்ட் எதிர்புறம் உள்ள 48 கடைகள் மற்றும் காம்பவுண்ட் சுவர் ஒரம் உள்ள 20 கடைகளும் மாநகராட்சிக்கு மாத வாடகை ரூ.600/- மற்றும் 874/- செலுத்தி வருகின்றனர். மேற்படி கடைகள் ஒதுக்கீடு செய்து 9 வருடங்கள் ஆகின்றன நடைபாதை கடைகள் என்பதால் தற்போது ரூ.600/- செலுத்தி வரும் 48 கடைகளுக்கு 15% வாடகை உயர்வு செய்தால் வரும் வாடகை ரூ.690/- லிருந்து ரூ.750/-ஆகவும் மாத வாடகை ரூ. 874/- செலுத்தி வரும் 20 கடைகளுக்கு 15% வாடகை உயர்வு செய்தால் வரும் வாடகை ரூ. 1005/-லிருந்து ரூ.1200/- ஆகவும் 01.04.2013 முதல் உயர்வு செய்து நிர்ணயம் செய்ய வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 28.01.13-ம் தேதிய தீர்மான எண்.174-ல் அலுவலக குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானித்துள்ளதை மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.10119 /2012 / அ1 (ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 354 நாள் 31.01.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 174 நாள் 28.01.2013ன் தீர்மானத்தை ஏற்று அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 37

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் குத்தகை இனங்கள் 01.04.2013 முதல் 31.03.2016-ம் ஆண்டு வரை ஒப்படைக்க – பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த பட்ச ஏலக் கோரிக்கையை ஏற்று - ஒப்படை செய்வது - தொடர்பாக.

பார்வை வ.வி.ம.நி.குழு தீர்மான எண்.187 நாள்.28.01.2013.

------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் சார்ந்த கீழ்க்கண்ட குத்தகை இனங்களுக்கு 01.04.2013 முதல் 31.03.2016 வரையிலான ஆண்டிற்கு 27.12.2012 மற்றும் 23.01.2013 தேதியில் நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழ் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு அதன் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்த பட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ எண் | இனம் | ஏலதாரர் பெயர் | 27.12.2012-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ. | 23.01.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | இராஜவீதி மருந்தக வளாகம் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். நிர்ணயம் செய்த அரசு மதீப்பீடு ரூ20,33,600/- | திரு.ஆ.மோகன் ராஜ் | 21,30,000/- (மின் ஏலம்) | ரூ.23,27,000/- (ஒப்பந்தப் புள்ளி) |
| 2 | தியாகி குமரன் மார்க்கெட் தரை கடைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம். (மாநகராட்சி நிரந்தர கடைகள் நீங்கலாக) நிர்ணயம் செய்த அரசு மதீப்பீடு ரூ28,07,900/- | திரு.P.சங்கர்ரமேஷ் | - | ரூ.31,10,000/- (மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளி) |

மேற்படி குத்தகை இனத்தில் வரிசை எண்.1-ல் திரு.M.மோகன் ராஜ் மற்றும் வரிசை எண்.2-ல் திருP.சங்கர்ரமேஷ் என்பவரிடமிருந்து அரசு நிர்ணயம் செய்த மதீப்பீட்டை காட்டிலும் கூடுதலாக ஏலக்கோரிக்கை பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி இனங்களின் உயர்ந்த பட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படை செய்ய அனுமதி வேண்டி வரி வதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 28.01.13-ம் தேதிய தீர்மான எண்.187-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. இவ்வினத்திற்கு வார்டு எண்.83 மாமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம் ஆட்சேபனை தெரிவித்தார். ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டது. மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமா்ப்பிக்கப்படுகிறது. ந.க.எண். 11130/12/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 355 நாள் 31.01.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 187 நாள் 28.01.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 38

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி - தெற்கு மண்டலம் - வார்டு 97 சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் வணிகவளாக கடைகள் (14 கடைகள்) அரசாணையின்படி வாடகை உயர்வு செய்வது – தொடர்பாக.

பார்வை :
1. நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி நாள். 02.03.2009.
2. மாமன்ற தீர்மானம் எண்.293 நாள்.28.03.2012.
3. ந.நி.ம.கு.வ.துறை அரசாணை எண்.92 நாள். 03.07.2007.

------

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.97ல் உள்ள சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் வணிகவளாக கடைகள் (கடை எண்கள். 3,7,8,9,12,19,20,21,22,24,25,28,29மற்றும் 31) பார்வை 1ல் குறிப்பிட்டபடி, 2009 முதல் 2012 வரை என மூன்றாண்டு காலத்திற்கு முந்தைய குறிச்சி நகராட்சியில் பொது ஏலம் விடப்பட்டது.

இணைக்கப்பட்ட பட்டியலில் குறிப்பிட்ட 14 கடைகளுக்கும் பார்வை 2ல் காணும் தீர்மானத்தின்படி, 2011-12ம் ஆண்டு குத்தகைதொகையிலிருந்து 5% உயர்வு செய்து 2012-13ம் ஆண்டுக்கான குத்தகைதொகையாக உயர்த்தப்பட்டது.

மேலும், பார்வை 3ல் காணும் அரசாணையின்படி, தொகுப்புக்கால அளவான மூன்றாண்டுகள் முடிவுற்ற கடைகளுக்கு 15% வாடகை உயர்த்த வேண்டும் என்ற நிபந்தனையின்படி 2012-13ம் ஆண்டு முதல் 2011-12ம் ஆண்டு குத்தகை தொகையிலிருந்து 15% உயர்வு செய்து 2012-13, 2013-14 மற்றும் 2014-15 ஆகிய மூன்றாண்டுகளுக்கு குத்தகை தொகையாக நிர்ணயம் செய்யவும், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.186 நாள். 28.01.2013-ன் படி மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.210/2012/பி6

**மாநகர மன்ற தீர்மானம் எண் 356 நாள் 31.01.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 186 நாள் 28.01.2013ன் தீர்மானத்தை ஏற்று அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 39**

**பொருள் :-** கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் – வருடாந்திர குத்தகை இனங்கள் 2013–2014ம் ஆண்டிற்கு உரிமம் புதுப்பிக்கப்பட வேண்டியது– தொடர்பாக.

**பார்வை:-** அலுவல்சாரா குறிப்பு ந.க.எண் 4642/2010/எம்.ஏ1 நாள் 01.11.12

*****

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வருடாந்திர உரிம இனங்கள் 2012– 2013ம் ஆண்டில் ஒப்படை செய்யப்பட்டது.

அ)

| வ. எண் | வார்டு எண் | இனம் | உரிமதாரர் | 2012–2013ம் ஆண்டு உரிமத்தொகை | 5% உயர்வு | 2013–2014ம் ஆண்டு கட்ட வேண்டிய உரிமத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 97 | சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் குளிர்பதனக்கடை | எஸ். மணிகண்டன் | 94,788 | 4,739 | 99,527 |
| 2 | 87 | சின்ன சுடுகாடு ஆ/பெ கழிப்பிடம் | எம். சோமசுந்தரம் | 95,000 | 4,750 | 99,750 |
| 3 | 88 | தால் பேக்டரி வீதி ஆ/பெ கழிப்பிடம் | என். முத்துசாமி | 1,65,000 | 8,250 | 1,73,250 |
| 4 | 88 | சுண்டக்காமுத்தூர் மெயின் ரோடு ஆ/பெ கழிப்பிடம் | கு.வெ. முனுசாமி | 68,000 | 3,400 | 71,400 |
| 5 | 86 | லாரிப்பேட்டை சுங்க வசூல் | பி. எ. ஹுசேன் | 8,66,833 | 43,342 | 9,10,175 |
| 6 | 93 | சுங்கவசூல்– குனியமுத்தூர் | எஸ்.ஷகீலா பேகம் | 2,01,000 | 10,050 | 2,11,050 |

மேலே குறிப்பிட்ட உரிம இனங்களில் வரிசை எண் 1 முதல் 6 வரை 2013–14ம் ஆண்டிற்கு முந்தைய 2012–13–ம் ஆண்டு ஏல உரிமத் தொகையிலிருந்து 5% உயர்வு செய்து 2013–2014ம் ஆண்டிற்கு 2ம் வருட குத்தகை தொகையாக நிர்ணயம் செய்யவும்

ஆ)

| வ.எண் | வார்டு எண் | இனம் | உரிமதாரர் | 2012–2013ம் ஆண்டு உரிமத்தொகை | 5% உயர்வு | 2013–2014–ம் ஆண்டு கட்ட வேண்டிய உரிமத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 7 | 89 | சுங்கவசூல் சுண்டக்காமுத்தூர் | ஜி. பாக்கியநாதன் | 2,01,965 | 10,098 | 2,12,063 |
| 8 | 86 | லாரிப்பேட்டை நவீன கழிப்பிடம் | அப்துல் கபூர் | | | |
| 9 | 97 | சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் ஏல மேடை | ஆர். கிருஷ்ணமூர்த்தி | 10,17,910 | 50,896 | 10,68,806 |

மேற்குறிப்பிட்ட இனங்களில் வரிசை எண். 7–ல் உள்ள வார்டு 89–க்குட்பட்ட சுண்டக்காமுத்தூர் சுங்க வசூல் திரு. ஜி. பாக்கியநாதன் என்பவருக்கு 2012–13–ம் ஆண்டில் மாமன்ற தீர்மான எண் 25 நாள் 27.04.12–ன் படி ஒப்படை செய்யப்பட்டது. 2013–2014ம் ஆண்டிற்கான 2–ம் ஆண்டு உரிமத்தை நடத்த இயலாது என்று கடிதத்தின் வாயிலாக தெரிவித்துள்ளபடியால் ஏல நிபந்தனை மீறப்பட்டுள்ளதால் வைப்பு தொகையினை பறிமுதல் செய்து இவ்வினத்தை பொது ஏலம் விடவும்,

வரிசை எண் 8—ல் உள்ள லாரிப்பேட்டை நவீன கட்டண கழிப்பிடம் திரு. அப்துல் கபூர் என்பவருக்கு 25.03.2010—ல் (முந்தைய தெற்கு மண்டலம் தற்போதைய மத்திய மண்டலம்) ஏலம் விடப்பட்டு மாமன்ற தீர்மான எண் 293 நாள் 31.03.2010—ன் படி ஒப்படை செய்யப்பட்டுள்ளதால் அதன் உரிம காலம் வரும் 31.03.2013 உடன் முடிவடைவதால் பொது ஏலம் கோரலாம்.

வரிசை எண். 9—ல் உள்ள வார்டு 97—க்குட்பட்ட சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் ஏல மேடை ஆர். கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு 2012—13—ம் ஆண்டில் மாமன்ற தீர்மான எண் 25 நாள் 27.04.2012—ன் படி ஒப்படை செய்யப்பட்டது. 2013—2014ம் ஆண்டிற்கான 2—ம் ஆண்டு உரிமத்தை நடத்த இயலாது என்று கடிதத்தின் வாயிலாக தெரிவித்துள்ளபடியால் ஏல நிபந்தனை மீறப்பட்டுள்ளதால் வைப்பு தொகையினை பறிமுதல் செய்து ஏலம் கோரலாம். எனவே மேற்படி 3 இனங்களை பொது ஏலம் விடவும், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.179 நாள். 28.01.2013-ன் படி மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 698/2012/பி6

**மாநகர மன்ற தீர்மானம் எண் 357 நாள் 31.01.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 179 நாள் 28.01.2013ன் தீர்மானத்தை ஏற்று அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 40**

**பொருள்** : கோயம்புத்தூர் மாநகராட்சி — தெற்கு மண்டலத்திற்குட்பட்ட — வார்டு எண்.97 சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் — ஏல மேடையில் வசூலிக்க வேண்டிய கட்டணங்களில் திருத்தம் செய்வது – தொடர்பாக.

————

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 97ல் உள்ள சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் ஏல மேடை சுங்கம் வசூல் செய்யும் உரிமத்தை கடந்த 11.04.2012ல் ஏலத்தில் கலந்து கொண்டு திரு.ஆர்.கிருஷ்ணமூர்த்தி என்பவர் (மாமன்ற தீர்மான எண் 25/நாள் 27.04.12ன் படி) உயர்ந்த பட்ச ஏலத் தொகையாக ரூ. 10,17,910/—க்கு எடுத்து நடத்தி வருகிறார். இவர் 2013—14ம் ஆண்டுக்கான இரண்டாம் வருட குத்தகை உரிமத்தை நடத்த இயலாது என்று தெரிவித்து உள்ளார். எனவே மேற்படி சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் ஏல மேடைக்கு வரும் 26.12.12 அன்று ஏலம் நடைபெறுகிறது.

மேற்படி ஏல மேடையில் சுங்கம் வசூல் செய்யும் கட்டண அளவுப் பட்டியல் குறிச்சி நகராட்சியில் எவ்வித கட்டண உயர்வும் செய்யாமலே நீண்ட நாட்களாக பழைய கட்டண அளவு தொகையே உள்ளதால் ஏலம் யாரும் கோர முன்வராத சூழ்நிலை உள்ளது. எனவே மேற்படி கட்டண தொகையை உயர்த்துவது சம்பந்தமாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கட்டண அளவு பட்டியலை வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.180 நாள். 28.01.2013-ன் படி மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 698/2012/பி6

**மாநகர மன்ற தீர்மானம் எண் 358 நாள் 31.01.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 180 நாள் 28.01.2013ன் தீர்மானத்தை ஏற்று அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 41**

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் – வார்டு எண் **97** சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் வணிக வளாக கடைகள் **30, 33, 34** ஏலம் விடுவது – தொடர்பாக.

**பார்வை:** **1.** கோவை பிரின்சிபல் டிஸ்ட்ரிக்ஸ் முன்சிப் கோர்ட் வழக்கு O.S. No.1187/12 I.A.1427/12 Balamurugan O.S. No. 1185/12.I.A.1423/12 Subbulingam O.S.1197/12 I.A. 1425/12 Kamalam.
**2.** மாநகராட்சி நிலை வழக்கறிஞரின் கருத்துரு நாள்.**22.01.2013.**
**3.**ஆணையாளர்(பொறுப்பு) அவர்களின் குறிப்பு உத்திரவு நாள்.**22.01.2013.**

------

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 97-க்குட்பட்ட சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் வணிகவளாக கடைகள் 30, 33, 34 ஆகிய மூன்றும் ஏலம் நடத்தி 9 ஆண்டுகள் முடிந்த காரணத்தால் கடந்த 2012-13 ஆண்டுக்கு வெளி மார்க்கெட் மதிப்பின்படி வாடகை உயர்வு செய்யப்பட்டதை ஆட்சேபித்து மேற்படி கடைகளின் குத்தகைதாரர்கள் கோவை பிரின்சிபல் டிஸ்ட்ரிக்ஸ் முன்சிப் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து (வழக்கு எண்.IA 1423/2012, IA 1427/2012 மற்றும் IA 1425/2012) வழக்கு மாநகராட்சிக்கு சாதகமாக நீதிமன்ற வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

மேற்படி கடைகளை பார்வை **1**ல் கண்ட மாநகராட்சி வழக்கறிஞரின் கருத்துப்படியும், பார்வை **2**ல் கண்ட ஆணையாளர்(பொறுப்பு) அவர்களின் உத்திரவின்படியும் பொது ஏலத்திற்கு விட பின்னேற்பு வேண்டியும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.185 நாள். 28.01.2013-ன் படி மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.**210/2012**/A1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 359 நாள் 31.01.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 185 நாள் 28.01.2013ன் தீர்மானத்தை ஏற்று அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 42**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி- மேற்கு மண்டலம் - வார்டு எண்.17- மருதமலைஅடிவாரம் பகுதியில் மாநகராட்சி சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ள கழிப்பறையின் சுற்றுப்புற பகுதியில் உள்ள காலியிடத்தினை வாகனநிறுத்துமிடமாக கருதியும் -கழிப்பறைகளுடன் சேர்த்து ஆண்டுமதிப்பு நிர்ணயம் செய்து - பொது ஏலம் விடுவது - தொடர்பாக.

-------

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்.17, மருதமலை அடிவாரம் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கழிப்பறைகள் கொண்ட சுற்றுப்புற பகுதியில் உள்ள காலியிடத்தில் கோவிலுக்கு வரும் வாகனங்கள் நிறுத்தப்பட்டு வருகிறது. மேலும் கழிப்பறைகள் ஏற்கனவே குத்தகை இனமாக கருதப்பட்டு மாமன்ற தீர்மான எண்.247 நாள்.25.10.2012-ன்படி அனுமதி பெற்று ஏலஅறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி சுற்றுப்புற பகுதியிலுள்ள காலி இடம் 19184 சதுரடி ஆகும். மேற்படி காலி இடத்தை வாகனம் நிறுத்துமிடமாகவும், கழிப்பறைகளுடன் சேர்த்து ஒரே இனமாக பொதுஏலம் விடுவதற்கும், அரசு நிர்ணயத்தொகை ஆண்டு மதிப்பு ரூ.1.60 லட்சம் என நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு நிதிக்குழு தீர்மான எண்.172 நாள்.28.01.2013-ன்படி அலுவலகக் குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.9750/ 2012 / அ1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 360 நாள் 31.01.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 172 நாள் 28.01.2013ன் தீர்மானத்தை ஏற்று அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 43

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் 2013-15-க்கான குத்தகை உரிம இனங்கள் - பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 26.12.2012 மற்றும் 10.5.2012-ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது - தொடர்பாக.

பார்வை: 1.ஏற்கனவே நடைபெற்ற மின்ஏல நாட்கள் 26.12.2012
2. இரண்டாவது பொது ஏலம் நாள்.23.01.2013

****

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் குத்தகை இனங்கள் 2013-2015 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்க பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கனவே 1 முறை 26.12.2012 தேதி ஏலம் நடைபெற்றது இவ்ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. எனவே இவ்வினங்களை 23.1.2013-ம் தேதியன்று மீண்டும் 2-வது முறையாக பொது மின் ஏலத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் வரப்பெற்ற விபரங்கள் கீழ்கண்டவாறு ஆகும்.

2-வது முறையாக ஏலம் நடைபெற்ற தேதி – 23.1.2013

| வ. எண் | குத்தகை இனங்கள் | கடந்த வருட ஏலத் தொகையில் 5% நிர்ணயம் செய்யப் பட்ட தொகை | ஏலதாரர் பெயர் | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | மருதமலை அடிவாரம் பகுதியில் 209 சதுரடியில் 5 ஆண்கள் (2 குளியலறை, 3 கழிப்பறை) மற்றும் 5 பெண்கள் (2 குளியலறை, 3 கழிப்பறை) கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் மருதமலை அடிவாரம் கழிப்பறைக்கு சுற்றியுள்ள பகுதியில் உள்ள 19184 சதுரடி அளவுள்ள இருசக்கரவாகனம் மற்றும் நான்கு சக்கரவாகனம் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் ந.க.எண்.9750/2012 / அ1(மே) | 1,60,000 | 1. V.உமா சங்கர்<br>2. A.கிருஷ்ணமூர்த்தி | 1,85,000<br>1,80,000 | 1,90,000 | 1,90,000 |

வரிசை எண். 1-ல் உள்ள மருதமலை அடிவாரம் பகுதியில் 209 சதுரடியில் 5 ஆண்கள் (2 குளியலறை, 3 கழிப்பறை) மற்றும் 5 பெண்கள் (2 குளியலறை, 3 கழிப்பறை) கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும்மருதமலை அடிவாரம் கழிப்பறைக்கு சுற்றியுள்ள பகுதியில் உள்ள 19184 சதுரடி அளவுள்ள இருசக்கரவாகனம் மற்றும் நான்கு சக்கரவாகனம் நிறுத்தும் உரிமத்திற்கு உயர்ந்தபட்ச மின்ஏலத்தொகை ரூ.1,90,000-த்திற்கு திரு.ஏ.உமாசங்கர் கோரியுள்ளார். இது மாநகராட்சி நிர்ணய தொகை(ரூ.1,60,000)(Base value) விட அதிகமாக உள்ளது. எனவே, இவ்வினத்தை ஒப்படைப்பது குறித்தும், வரிவிதிப்பு மற்றும் நிதிகுழுவின் ஒப்புதல் பெற அனுமதி வேண்டப்பட்டதில் வரிவிதிப்பு நிதிக்குழு தீர்மான எண்.190 நாள்.28.01.2013-ன்படி அலுவலகக் குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.12794/2012/அ1(மே)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 361 நாள் 31.01.2013

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 190 நாள் 28.01.2013ன் பரிந்துரையினை ஏற்று அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 44**

**பொருள்:–** கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் – வார்டு எண்.**21**க்குட்பட்ட பூசாரிபாளையத்தில் வாடகை கட்டிடத்தில் செயல்படும் அங்கன்வாடி மையம் பழுதடைந்த நிலையில் உள்ளதால் செயல்படாத நிலையில் உள்ள மாநகராட்சி நூலக கட்டிடத்திற்கு மாற்றித் தரக் கோருவது தொடர்பாக.

பார்வை:– மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.3068/அ3/2012 நாள். 27.11.2012.

––––––

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்.**21–**ல் உள்ள பூசாரிபாளையத்தில் வாடகை கட்டிடத்தில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையம் பழுதடைந்த நிலையில் உள்ளதால் குழுந்தைகளின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு செயல்படாத நிலையில் உள்ள மாநகராட்சி நூலக கட்டிடத்திற்கு மாற்றித் தரும்படி 21வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோரியுள்ளதால் மேற்படி அங்கன்வாடி மையத்தை மாற்றுவதற்கும் ஏற்கனவே அங்கன்வாடி மையங்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்வதற்கு வரிவிதிப்பு நிதிக்குழு தீர்மான எண்.169 நாள்.28.01.2013-ன்படி அலுவலகக் குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் 12898/2012/டி2(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 362 நாள் 31.01.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 169 நாள் 28.01.2013ன் பரிந்துரையினை ஏற்று அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 45**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்கள்.6,7,8,9-ல் முந்தைய கவுண்டம் பாளையம் நகராட்சியால் கூட்டுறவு பண்டக பொது விநியோகத்திட்ட நியாய விலை கடைகளுக்கு கட்டிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட கடைகளுக்கு மாதாந்திர வாடகைத்தொகை நிர்ணயம் செய்தல் - தொடர்பாக.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்கள்.6,7,8,9 –ல் முந்தைய கவுண்டம் பாளையம் நகராட்சியால் கூட்டுறவு பண்டக பொது விநியோகத்திட்ட நியாய விலை கடைகளுக்கு கட்டிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி கடைகள் கீழ்க்கண்ட இடத்தில் அமைந்துள்ளது.

| வார்டு எண். | இடம் | பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி சதுரடிக்கு(ரூ) | பரப்பு | மாதாந்திர வாடகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 6 | காமராஜ்நகர் கடை எண்.93 | 17.27 | 429 | 7410 |
| 6 | பெரியண்ணா நகர் கடை எண்.130 | 16.58 | 343 | 5687 |
| 7 | V.O.C.நகர் கடைண்.100 | 17.32 | 438 | 7587 |
| 7 | தேவாங்க நகர் கடை எண்.1 | 17.32 | 425 | 7361 |
| 8 | S.P.M.கார்டன் | 17.26 | 438 | 7560 |
| 9 | மீனாட்சி நகர் கடை எண்.25 | 12.16 | 441 | 5363 |
| 9 | மேட்டுப்பாளையம் சாலை வீட்டு வசதிவாரிய குடியிருப்பு கடை எண்.24 | 17.27 | 435 | 7513 |

மேற்படி கடைகளுக்கு இதுவரை மாதாந்திர வாடகை தொகை நிர்ணயம் செய்யப்படவில்லை. எனவே பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி மாதாந்திர வாடகை தொகை நிர்ணயம் செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிகுழுவின் ஒப்புதல் பெற அனுமதி வேண்டப்பட்டதில் வரிவிதிப்பு நிதிக்குழு தீர்மான எண்.171 நாள்.28.01.2013-ன்படி அலுவலகக் குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.13617/ 2012/ A1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 363 நாள் 31.01.2013**

பொருளில் கண்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கடைகளுக்கு கலம் எண் 5-ல் குறிப்பிட்டுள்ள மாதாந்திர வாடகையை 50 சதவீதமாக குறைத்து மாத வாடகை நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 46

**பொருள் :** வணிக வளாக கடைகள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்குமண்டலம் -பன்னீர் செல்வம் பூமார்க்கெட் மேடை கடைகளுக்கு தினசரி வாடகையிலிருந்து மாதவாடகையாக கணக்கீடு செய்வது - உரிம காலம் முடிவுற்ற கடைகளுக்கு 1.4.2013 முதல் 15% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் - தொடர்பாக.

**பார்வை :** அரசாணை (நிலை) எண்.92 – நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.07.

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வணிக வளாக கடைகள் மேற்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான பன்னீர் செல்வம் பூமார்க்கெட் மேடை கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீடித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை இருபதாண்டுகள் எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மாண எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி கடைகளின் உரிமக்காலம் கீழ்கண்ட தேதிகளில் முடிவடைவதால் மேலும் மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் புதுப்பிக்க பார்வை 1-ல் காணும் அரசாணை (நிலை) எண்.92 – நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.07-ன்படி 1.4.2013 முதல் 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்து உயர்வு செய்த உரிம கட்டணம் அடங்கிய பட்டியல் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம்**

**1. இடம் : பன்னீர் செல்வம் பூ மார்க்கெட் 5 x4=20 சதுரடி (மேடை கடைகள் தினசரி வாடகை) (வார்டு -24)**

| வ. எண். | வ.வி. எண். | கடை எண் | பெயர் | கடை ஒதுக்கீடு செய்யப் பட்ட நாள் | உரிமக் காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக் கப் பட வேண்டி ய நாள் | மாத வாடகை ரூ. | அரசு ஆணை எண்.92 ந.நி. மற்றும் கு.வ.துறை நாள் 03.07.07-ன் ன் படி குறைந்த பட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| **1.** | 20370 | A1 | செல்லம்மாள் | 09.11.05 | 08.11.08 | 9.11.08 | 18098 (Case) | 20813 |
| **2.** | 20371 | A2 | எஸ்..நந்தகுமார் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 3498 | 4023 |
| **3.** | 20372 | A3 | எம். காஜாமொய்தீன் (எ) சேட்டு | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 2464 | 2834 |
| **4.** | 20373 | A4 | ஜீ. கீதா | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 2099 | 2414 |
| **5.** | 20374 | A5 | எஸ்..ஷாஜகான் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 2099 | 2414 |
| **6.** | 20375 | A6 | வி.பி.நஞ்சப்பன் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 2099 | 2414 |
| **7.** | 20376 | A7 | எம்.காஜா மைய்தீன் | 25.11.10 | 24.11.13 | 25.11.13 | 3346 | 3848 |
| **8.** | 20377 | A8 | கே.கண்ணன் | 25.11.10 | 24.11.13 | 25.11.13 | 3346 | 3848 |
| **9.** | 20379 | B10 | பி.ருக்குமணி | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 2099 | 2414 |
| **10.** | 20380 | B11 | வி.பொன்மயில் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 2099 | 2414 |
| **11.** | 20381 | B12 | ஆர்.ராதாகிருஷ்ணன் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 2099 | 2414 |
| **12.** | 20382 | B13 | எ.உம்மர் வுத்தப் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **13.** | 20383 | B14 | பி.ஜெயகுமார் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1582 | 1819 |
| **14.** | 20385 | B16 | பி.ராதாகிருஷ்ணன் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 2099 | 2414 |
| **15.** | 20386 | C17 | வள்ளியம்மாள் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 2099 | 2414 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **16** | 20387 | C18 | என்.வசந்தி | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 2099 | 2414 |
| **17** | 20388 | C19 | டி.கணேசன் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 2099 | 2414 |
| **18** | 20389 | C20 | டி.என்.முத்துராமன் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 2099 | 2414 |
| **19** | 20390 | C21 | எஸ்.ராஜாகனி | 09.11.05 | 08.11.08 | 9.11.08 | 6844 **(case)** | 7871 |
| **20** | 20391 | C22 | எஸ்.ராஜாகனி | 09.11.05 | 08.11.08 | 9.11.08 | 8365 **(case)** | 9620 |
| **21** | 20392 | C23 | எஸ்.சம்பத்குமார் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 2099 | 2414 |
| **22** | 20393 | C24 | சி.சிவராஜ் | 09.11.05 | 08.11.08 | 9.11.08 | 8213 | 9445 |
| **23** | 20394 | C25 | பி.புவியரசு | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 2099 | 2414 |
| **24** | 20395 | C26 | சி.சிவராஜ் | 09.11.05 | 08.11.08 | 9.11.08 | 6083 | 6995 |
| **25** | 20396 | C27 | சி.சிவராஜ் | 09.11.05 | 08.11.08 | 9.11.08 | 8213 | 9445 |
| **26** | 20397 | C28 | வி.கே.சண்முகம் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 2099 | 2414 |
| **27** | 20398 | D29 | கே.சண்முகம் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **28** | 20409 | D30 | சி.சிவராஜ் | 09.11.05 | 08.11.08 | 9.11.08 | 2281 | 2623 |
| **29** | 20400 | D31 | கே.எம்.இஸ்மாயில் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **30** | 20401 | D32 | சி.சிவராஜ் | 09.11.05 | 08.11.08 | 9.11.08 | 2281 | 2623 |
| **31** | 20402 | D33 | ஆர்.செல்வராஜ் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **32** | 20403 | D34 | வி.பி.குமாரசாமி | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **33** | 20404 | D35 | ஏ.பாருக் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **34** | 20405 | D36 | வி.கே.மருதாசலம் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **35** | 20406 | D37 | ஜீ.ஷேக் அலாவுதீன் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **36** | 20407 | D38 | எம். காதர் பாட்ஷா | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **37** | 20408 | D39 | சி.அப்துல் ரகுமான் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **38** | 20399 | D40 | ஏ.அன்சாரி | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **39** | 20410 | E41 | என். குருசாமி | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **40** | 20412 | E43 | பி.சுந்தரசாமி | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **41** | 20413 | E44 | எம்.கே.செரிப் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **42** | 20414 | E45 | ஒய்.அப்துல் ஹமீத் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **43** | 20415 | E46 | ஆர்.கோவிந்தராஜ் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **44** | 20416 | E47 | ஆர்.கோவிந்தராஜ் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **45** | 20417 | E48 | ஏ.ஹக்கீம் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1399 | 6680 |
| **46** | 20418 | E49 | எஸ். நூர்முகம்மது | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **47** | 20419 | E50 | எ.வெங்கடேஷ் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **48** | 20420 | E51 | எ.என்.சக்திவேல் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **49** | 20421 | E52 | எ.என்.துரைசாமி | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **50** | 20422 | E53 | எ.எஸ்.மோகன சுந்தரம் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **51** | 20423 | E54 | ஜி.பாத்திமா பீபீ | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **52** | 20424 | E55 | M. அக்பர் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **53** | 20518 | E56 | S.மைதீன் பாட்சா | 25.11.10 | 24.11.13 | 25.11.13 | 3650 | 4198 |
| **54** | 20426 | F57 | எஸ்.சரவணன் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1916 | 2203 |
| **55** | 20427 | F58 | எ.பி.ஆறுச்சாமி | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1764 | 2029 |
| **56** | 20428 | F59 | ஏ.அப்துல் ஜப்பார் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **57** | 20429 | F60 | டி.அசோக் குமார் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **58** | 20430 | F61 | என்.நடராஜ் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **59** | 20431 | F62 | ஆர்.பாலகணேசன் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **60** | 20432 | F63 | N.ரவிச்சந்திரன் | 6.9.2011 | 5.9.2014 | 5.9.14 | 1521 | 1749 |
| **61** | 20433 | F64 | இ.அப்துல் ஹைப் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **62** | 20434 | F65 | ஏ.முஸ்தபா | 09.04.10 | 08.04.13 | 9.4.13 | 1217 | 1400 |
| **63** | 20435 | F66 | எஸ்.முஸ்தபா | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 1065 | 1225 |
| **64** | 20438 | F69 | ஜீ.வி.ராமதாஸ் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **65** | 20440 | F71 | எ.எஸ். ரங்கநாதன் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **66** | 20442 | G73 | ஜே.எம்.ஹனீபா | 22.02.10 | 21.02.13 | 22.2.13 | 1065 | 1225 |
| **67** | 20443 | G74 | ஏ.அப்துல் லத்தீப் | 22.02.10 | 21.02.13 | 22.2.13 | 913 | 1050 |
| **68** | 20444 | G75 | எஸ்.அழகு | 22.02.10 | 21.02.13 | 22.2.13 | 913 | 1050 |
| **69** | 20445 | G76 | கே.ராஜாமணி | 22.02.10 | 21.02.13 | 22.2.13 | 913 | 1050 |
| **70** | 20446 | G77 | R. வேலுமணி | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **71** | 20447 | G78 | பி.பாலு | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **72** | 20448 | G79 | எஸ்.வித்யா சாகர் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **73** | 20449 | G80 | ஆர். உமாமகேஸ்வரி | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **74** | 20450 | G81 | பி.சக்திவேல் | 22.02.10 | 21.02.13 | 22.2.13 | 913 | 1050 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **75** | 20451 | G82 | டி.சேகர் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **76** | 20452 | G83 | கே.முருகவேல் (ம) எச்.ஜெயந்தி | 22.02.10 | 21.02.13 | 22.2.13 | 913 | 1050 |
| **77** | 20453 | G84 | யு.அசாருதீன் | 22.02.10 | 21.02.13 | 22.2.13 | 913 | 1050 |
| **78** | 20457 | G88 | எச்.அனீஸ் | 22.02.10 | 21.02.13 | 22.2.13 | 913 | 1050 |
| **79** | 20458 | H 89 | எம். சண்முகநாதன் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **80** | 20459 | H90 | ஏ.எஸ்.ஹக்கீம் | 22.02.10 | 21.02.13 | 22.2.13 | 913 | 1050 |
| **81** | 20460 | H 91 | எ.வி. சண்முக சுந்தரம் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **82** | 20461 | H 92 | எம்.அருண்சங்கர் | 22.02.10 | 21.02.13 | 22.2.13 | 913 | 1050 |
| **83** | 20464 | H 95 | ஏ.அப்துல் காதர் | 22.02.10 | 21.02.13 | 22.2.13 | 913 | 1050 |
| **84** | 20465 | H 96 | ஐ.ஹாருண் ரசீத் | 22.02.10 | 21.02.13 | 22.2.13 | 913 | 1050 |
| **85** | 20466 | H 97 | எம்.ஜெகதீஸன் | 22.02.10 | 21.02.13 | 22.2.13 | 913 | 1050 |
| **86** | 20468 | H 99 | கே.எம்.இஸ்மாயில் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **87** | 20469 | H 100 | எம்.பாலு | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **88** | 20470 | H 101 | கே.பத்மாவதி | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **89** | 20471 | H 102 | என்.சக்கில் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **90** | 20472 | H 103 | எம். முகம்மது ரபீக் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **91** | 20473 | H 104 | எம். முகம்மது அஸ்ரப் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **92** | 20474 | H 105 | பி.கணேசன் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **93** | 20475 | H 106 | எ.என். சந்திர சேகரன் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **94** | 20476 | I 107 | பி. மணியன் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **95** | 20477 | I 108 | எ.மரகதம் ஜெயலட்சுமி | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **96** | 20478 | I 109 | ரவிச்சந்திரன் | 01.11.05 | 31.10.08 | 1.11.08 | 2433 | 2798 |
| **97** | 20480 | I 111 | எம்.நாகராஜ் | 22.02.10 | 21.02.13 | 22.2.13 | 913 | 1050 |
| **98** | 20481 | I 112 | எம். உஸ்மான் பீர் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **99** | 20482 | I 113 | எஸ். முருகேசன் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 3498 | 4023 |
| **100** | 20483 | I 114 | ஜி. கோவிந்தராஜ் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 2616 | 3008 |
| **101** | 20484 | I 115 | எம். சகாபுதீன் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **102** | 20485 | I 116 | எஸ். விஜயகுமார் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **103** | 20486 | I 117 | எஸ்.காதர் மைதீன் | 22.02.10 | 21.02.13 | 22.2.13 | 1217 | 1400 |
| **104** | 20487 | I 118 | என். சண்முகம் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **105** | 20488 | I 119 | வி. சுந்தரம் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **106** | 20489 | I 120 | கே.எம். உசேன் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **107** | 20490 | I 121 | வி.என். கந்தசாமி | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **108** | 20491 | I 122 | எஸ். முகம்மது அலி | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **109** | 20492 | I 123 | பா. தமிழரசு | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **110** | 20493 | I 124 | எஸ். சர்புதீன் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **111** | 20494 | J125 | பி. சிவகுமார் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **112** | 20495 | J126 | எ. பக்கீர் முகம்மது | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **113** | 20496 | J 127 | டீ.பூபதி | 22.02.10 | 21.02.13 | 22.2.13 | 913 | 1050 |
| **114** | 20497 | J128 | எம். அப்துல் அஜீஸ் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **115** | 20498 | J 129 | எஸ்.செந்தில் குமார் | 22.02.10 | 21.02.13 | 22.2.13 | 1095 | 1259 |
| **116** | 20499 | J130 | எஸ். தம்பியப்பா | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **117** | 20500 | J131 | பி. கிருஷ்ணமூர்த்தி | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **118** | 20501 | J132 | எ. ரங்கநாதன் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **119** | 20502 | J 133 | எஸ்.காதர் மைதீன் | 22.02.10 | 21.02.13 | 22.2.13 | 1217 | 1400 |
| **120** | 20503 | J134 | எம். எ. யூசப் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **121** | 20504 | J135 | ஆர். ராமசாமி | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **122** | 20505 | J136 | ஆர். உமா மகேஸ்வரி | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **123** | 20506 | J137 | டி. செந்தில் குமார் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **124** | 20507 | J138 | எம். பழனிசாமி | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **125** | 20508 | J139 | வி. கேசவன் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **126** | 20509 | J140 | எ.ஆர். பாக்கியம் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |
| **127** | 20510 | J 141 | எஸ். ஜாபர் அலி | 22.02.10 | 21.02.13 | 22.2.13 | 1065 | 1225 |
| **128** | 20511 | J142 | எச். ஜாபர் அலி | 09.11.08 | 08.11.11 | 9.11.11 | 3741 | 4302 |
| **129** | 20512 | J 143 | கே.முஸ்தபா | 22.02.10 | 21.02.13 | 22.2.13 | 1065 | 1225 |
| **130** | 20513 | J144 | எஸ். சின்னசாமி கவுடர் | 02.11.10 | 01.11.13 | 2.11.13 | 882 | 1014 |

மேற்படி பன்னீர் செல்வம் பூமார்க்கெட் மேடை கடைகள் அனைத்திற்கும் தினசரி வாடகை அடிப்படையில் ஏலம் நடத்தப்பட்டு ஒப்படை செய்யப்பட்டுள்ளது. இவ்வினங்களுக்கு மாதாந்திர வாடகையாக கணக்கிட்டு 15 % வாடகை உயர்வு செய்து வசூலிக்கவும், ஏலம் போகாத மேடை கடைகளுக்கு மாதாந்திர வாடகை அடிப்படையிலேயே ஏலம் நடத்தவும், வாடகைக்கு ஒப்பு கொள்ளாத உரிமத்தாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலத்திற்கு கொண்டு வரவும், வரிவிதிப்பு மற்றும் நிதிகுழுவின் ஒப்புதல் பெற அனுமதி வேண்டப்பட்டதில் வரிவிதிப்பு நிதிக்குழு தீர்மான எண்.193 நாள்.28.01.2013-ன்படி அலுவலகக் குறிப்பை ஏற்றும் மற்றும் இவ்வினங்களில் உள் வாடகை அடிப்படையில் நடத்தப்படும் கடைகளை ஆய்வு செய்து உரிமம் ரத்து செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.1476/2008/அ1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 364 நாள் 31.01.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 193 நாள் 28.01.2013ன் பரிந்துரையினை ஏற்று அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது. மேலும் வ.எண் 45 கடைஎண் E48-க்கு 15 சதவீதம் உயர்வு செய்த மாத வாடகை ரூ. 6680.00 என்பதை ரூ 1609.00 என திருத்தம் செய்து பதிவு செய்யப்பட்டது

---

## பொருள் எண் 47

**பொருள் :** வணிக வளாக கடைகள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்குமண்டலம் உரிம காலம் முடிவுற்ற கடைகளுக்கு 1.4.2013 முதல் 15% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் - தொடர்பாக

**பார்வை :** அரசாணை (நிலை) எண்.92 – நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.07.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வணிக வளாக கடைகள் மேற்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீடித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை இருபதாண்டுகள் எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மாண எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி கடைகளின் உரிமக்காலம் கீழ்கண்ட தேதிகளில் முடிவடைவதால் மேலும் மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் புதுப்பிக்க பார்வை 1-ல் காணும் அரசாணை (நிலை) எண்.92 – நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.07-ன்படி 1.4.2013 முதல் 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்ய உரிம கட்டணம் அடங்கிய பட்டியல் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மேற்கு மண்டலம்**

**3 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்**

**1. இடம் : கிருஷ்ணசாமி ரோடு வடக்கு 17 x 10 = 170 சதுரடி (வார்டு 22)**

| வ. எண். | வ.வி. எண். | கடை எண் | பெயர் | கடை ஒதுக்கீடு செய்யப் பட்ட நாள் | உரிமக் காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்கப் பட வேண்டிய நாள் | தற்போ துள்ள மாத வாடகை ரூ. | அரசு ஆணை எண்.92 ந.நி. மற்றும் கு.வ.துறை நாள் 03.07.07-ன் ன் படி குறைந்த பட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 20022 | 2 | என்.சரவணன் | 06.09.2010 | 05.09.2013 | 06.09.2013 | 3700 | 4255 |

2. இடம் : டி.பி. ரோடு 16 ½ x 11 = 182 சதுரடி (வார்டு 22)

| வ. எண். | வ.வி. எண். | கடை எண் | பெயர் | கடை ஒதுக்கீடு செய்யப் பட்ட நாள் | உரிமக் காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்கப் பட வேண்டிய நாள் | தற்போ துள்ள மாத வாடகை ரூ. | அரசு ஆணை எண்.92 ந.நி. மற்றும் கு.வ.துறை நாள் 03.07.07-ன் ன் படி குறைந்த பட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2. | 20523 | 13 | எம்.மகுடபதி | 01.08.2010 | 31.07.2013 | 01.08.2013 | 72000 | 82800 |
| 3. | 20527 | 15 | என்.ஜோதி வேல் | 25.11.2010 | 24.11.2013 | 25.11.2013 | 16200 | 18630 |

3. இடம் : காந்திபார்க் புதிய கடைகள் 10 x 22 = 220 சதுரடி (வார்டு 24)

